# வன்முறை மோதலுக்குப் பின்பான மீளிணக்கப்பாடு

## கொள்கைச் சுருக்கம்

© ஜனநாயகம் மற்றும் தேர்தல் செயற்பாட்டு உதவிக்கான சர்வதேச நிறுவகம்(IDEA) - 2004

சர்வதேச IDEA அமைப்பின் பிரசுரங்கள் குறித்துரைப்பான தேசிய மற்றும் அரசியல் நலன்களிலிருந்து சுயாதீனமானவையாகும். இப்பிரசுரத்தில் கூறப்படும் கருத்துக்கள் சர்வதேச IDEA அமைப்பு, அதன் நிறைவேற்றுச்சபை அல்லது அதன் மன்ற அங்கத்தினர்களின் கருத்தாக இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை.

இப்பிரசுரத்தின் முழுப்பகுதியையுமோ அல்லது பகுதியையோ மீண்டும் பிரசுரிப்பதற்கு அல்லது மொழிபெயர்ப்பதற்கான அனுமதி குறித்த விண்ணப்பம் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

தகவல் அலகு
சர்வதேச IDEA
SE – 103 34 ஸ்டொக்ஹோம்
சுவீடன்.

சர்வதேச IDEA அமைப்பு தனது பணியைப் பரப்புவதில் ஊக்கங்கொண்டுள்ளதால் அதன் பிரசுரங்களை மீண்டும் வெளியிடுதல் மற்றும் மொழிபெயர்த்தலுக்கான அனுமதியை விரைவாக வழங்கும்.

விளக்க வரைபடம் வடிவமைப்பு : ஸ்லோ பொக்ஸ் புரடக்ஷன்ஸ் AB, சுவீடன்
அட்டைப் புகைப்படங்கள் : CORBIS/SCANPIX
அச்சிட்டோர் : குளோப் பிரின்ட்
ISBN : 91-89578-07-4

இது ***வன்முறை மோதலுக்கு பின்பான மீளிணக்கப்பாடு : கொள்கைச் சுருக்கம்(Reconciliation After Violent Conflict : Policy Summary)*** என்னும் ஆக்கத்தின் நேரடி மொழிபெயர்ப்பாகும். ஜனநாயகம் மற்றும் தேர்தல் செயற்பாட்டு உதவிக்கான சர்வதேச நிறுவகம்(IDEA) , ஸ்டொக்ஹோம், சுவீடன், 2004.

மொழிபெயர்க்கப்பட்ட விடயவாசகத்தின் தவற்ற தன்மையை சர்வதேச IDEA அமைப்பு செவ்வைப்பார்க்கவில்லை. ஐயங்கள் ஏதும் எழுமிடத்து மூல ஆங்கில வாசகமே மேலோங்கும். (ISBN 91-89098-87-0), மொழிபெயர்ப்பு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

CPA
Centre for Policy Alternatives

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
24/2, 28வது ஒழுங்கை,
ஒவ் பிளவர் வீதி,
கொழும்பு 7,
இலங்கை.

# வன்முறை மோதலுக்குப் பின்பான மீளிணக்கப்பாடு

## கொள்கைச் சுருக்கம்

*இக்கொள்கைச் சுருக்கமானது IDEA வெளியீடான "**வன்முறை மோதலுக்குப் பின்னரான மீளிணக்கப்பாடு: ஒரு கையேடு (2003)**" என்பதின் சாராம்சமாகும். உதாரணங்களும், விடயகற்கைகளும் நீக்கப்பட்டு, வலுவூட்டும் விவாதங்கள் சுருக்கப் பட்டுள்ளன. கையேட்டில் தொடர்ந்தும் இருக்கும் சாராம்சம் என்னவெனில்: கடந்த கால வன்முறையின் மரபுரிமைப்பண்பு பொருத்தமான முன்னேற்றமான கொள்கை உருவாக்கத்தை வரைவதற்கான முக்கிய அம்சங்களின் சுருக்கமாகும்.*

### *அறிமுகம்*

### மீளிணக்கமும் ஜனநாயகமும்

*ஜனநாயகரீதியான இணக்கப்பாடு, மோதல் விஷயங்கள் சம்பந்தமாக தீர்மானங்களை உருவாக்குகிறது. மீளிணக்கம் இந்தத் தீர்மானங்களை அமுல்படுத்துபவர்களுக்கிடையில் உறவுகளை ஏற்படுத்துகின்றது.*

மோதலுக்குப் பின்னான ஒரு காத்திரமான ஜனநாயகம், இருதரப்பு அடிப்படையில் உருவாக்கப்படவேண்டும். பிளவுபட்ட ஒரு சமூகத்தில் சமாதானமாகக் கையாளக் கூடிய வகையில் *தெளிவான அமைப்புகளும், ஒழுங்குமுறைகளும்* இருக்க வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட குழுக்களுக்கிடையில் *வேலைக்கான உறவு முறைகளும்* இருக்க வேண்டும். ஒரு சமூகம் அவர்களுக்கிடையில் செயற்பாட்டு உறவுமுறையை வளர்த்துக் கொள்ளத் தவறுமானால் அமைப்புகள் தெளிவின்றியும் எதிரிடையாகவும் இருப்பதுடன், அமைப்புகள் ஒழுங்காக இயங்காமலும் போய்விடுகின்றன. மறுபுறம் பிரஜைகளுக்கிடையிலான உள்ளார்ந்த உறவுகளில் குறைந்தபட்ச கூட்டுறவு தன்மை இருந்தால் தான் அங்கு தெளிவும், நேர்மையும் இருக்கும்.

ஜனநாயகரீதியான இணக்கப்பாடு மோதல் விஷயங்கள் சம்பந்தமாக தீர்வுகளை உருவாக்குகிறது. மீளிணக்கம் இந்தத் தீர்வுகளை அமுல்படுத்துபவர்களுக் கிடையில் *உறவுகளை* ஏற்படுத்துகின்றது. இணக்கப்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் அரசியல்வாதிகளுக்கும், தொடர்பை உருவாக்குபவர்களுக்கும் இதைப் பிரயோ கிப்பது சுலபமானதல்ல. இது முழு மக்களுக்கும் பிரயோகிக்கப்பட வேண்டும். பொதுமக்கள் குறைந்தபட்ச நேர்மையின் அடிப்படையில் இதனைப் பிரயோகிப்பதற்கு தயார்படுத்தப்படாதவரையும், குறைந்த பட்சம் ஒவ்வொருவரும் அதை முயற்சிக் காதவரையிலும் மிகவும் ஆற்றல் வாய்ந்த ஜனநாயகவாதிகளால் உருவாக் கப்படுகின்ற உலகின் மிகவும் சிறந்த ஜனநாயக முறைமை கூட உயிர் வாழமுடியாது.

மீளிணக்கப்பாட்டின் மூலமான *ஜனநாய கத்தை வெற்றிகரமான அமுலாக்கத்திற்கு செயற்பாட்டுரீதியான உறவுமுறை அவசிய மானது.* அத்துடன் மீளிணக்கப்பாடானது பொருளாதாரம், நீதி, அரசியல் மற்றும் சமூக அதிகாரப்பகிர்வு போன்ற ஜனநாயகச் செயற்பாடுகளையும் வேண்டி நிற்கின்றது. மீளிணக்கத்திற்கான தார்மீக ரீதியான வாதம் மட்டுமன்றி, சக்தி வாய்ந்த ஒரு நடைமுறைரீதியான வாதமும் இருக்கின்றது. சாதகமான செயற்பாட்டு உறவுகள் நல்லாட்சி வளர்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்குகின்ற அதே வேளை, எதிர்மறை உறவுகள் ஒரு நல்ல ஆட்சிமுறையைக் கூட கெடுத்து விடுகின்றது.

## 1 மீளிணக்கம்: பொதுவான கொள்கை விஷயங்கள்

*பிரதான விடயங்களான நீதி, உண்மை, ஒற்றுமை, நஷ்டஈடு என்பனவற்றை உள்ளடக்கி பிளவுபட்ட கடந்த காலத்திலிருந்து பங்காளியான எதிர்காலத்தை நோக்கி முன்னேற்றுவதன் மூலமே மீளிணக்கப்பாடு முன்னேற்றத்தை அடைய முடியும்.*

மீளிணக்கம் இரண்டு வகையில் ஒரு இலக்கையுடையது. சில விடயங்களை அடைவது - மற்றும் முன்னேற்றம் - இதன் அர்த்தம் அந்தக் குறிக்கோளை அடைவதாகும். இந்த இரண்டு கருத்துக் களையும் குழப்பினால் முரண்பாடு எழலாம். மீளிணக்கம் ஒரு முன்னேற்றம் என்ற வகையில் நாம் அதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். எங்களுடைய நோக்கங்களைப் பொறுத்தவரையில், பிரதான விடயங்களான நீதி, உண்மை, ஒற்றுமை, நஷ்டஈடு என்பனவற்றை உள்ளடக்கி, பிளவுபட்ட கடந்த காலத்திலிருந்து, பங்காளியான எதிர் காலத்தை நோக்கி முன்னேறுவதன் மூலமே மீளிணக்கப்பாடு முன்னேற்றத்தை அடைய முடியும்.

- *மீளிணக்கம் என்பது ஒரு நீண்ட கால வழிமுறையாகும்.* மீளிணக்கத் துக்கான துரித வழிமுறை எதுவும் கிடையாது. அது நேரத்தை எடுக்கும், அது தனக்கு வேண்டிய நேரத்தை எடுக்கும்; அதன் போக்கை உத்தரவிட முடியாது.
- *மீளிணக்கம் என்பது ஓர் ஆழமான வழிமுறையாகும்.* அது பார்வைகள், அபிலாசைகள், மன உணர்ச்சிகள், மற்றும்
- *மீளிணக்கம் என்பது மிகவும் பரந்த ஒரு வழிமுறையாகும்.* இது எல்லோர் மீதும் பிரயோகிக்கப்படுவதாகும். இது நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் என்றோ பாதிப்பினால் தண்டிக்கப்பட்ட வர்களோ என்றில்லாமல் மக்கள் என்பதையே மையப்படுத்தியிருக்கும். வன்செயல் மோதலின் கீழான ஒரு சமுதாயத்தில் பார்வைகள், நம்பிக்கைகள் என்பன பொதுவாகக் கூடுதலான அளவிலும், பரந்த அளவிலும் ஊடுருவி இருக்கும்.
- *வெற்றியடைவதற்கு அங்கு தனி யொரு பரிகார முறை எதுவும் கிடையாது.* ஒவ்வொரு மோதலும் அதன் பின் நிகழும் ஜனநாயகத் தீர்வும் வேறுபாடானவை. அவர்களுக்கிடை யிலான பங்காளித்தனம் பல ஒற்றுமைகளைக் கொண்டிருந்த போதிலும், முக்கியமான விஷயங் களில் மீளிணக்க வழிமுறை சம்பந்தமாக மற்றெல்லோரிடமிருந்தும் வேறுபடுகின்றது.
- *மீளிணக்கத்துக்கு உதவி அளிக்க நன்கொடை வழங்கும் சமூகம் அதிக அளவில் தயாராக உள்ளது.* மோதலைத் தடுப்பதிலும் மனித முன்னேற்றம், மனிதப் பாதுகாப்பு, வறுமையை ஒழித்தல், சமாதா னத்தைக் கட்டியெழுப்புதல் என்பவ ற்றில் இருதரப்பு மற்றும் உலகளாவிய நன்கொடையாளர்களும், அதே போல உலகளாவிய, பிராந்திய செயற் பாட்டாளர்களும் மீளிணக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள வேண்டும்.

## 2 மீளிணக்கத்துக்கான வழிமுறை

தர்க்கரீதியான ஒரு தொடரான கட்டங்களை நோக்கிச் செல்கையில் மீளிணக்கத்தை இலகுபடுத்துவதில் ஓர் அபாயமும் இருக்கின்றது. ஒவ்வொரு கட்டத்திலும் பழைய ஆரோக்கியமற்ற நிலைக்குத் திரும்பிவிடக்கூடிய உண்மையான சாத்தியக்கூறு இருக்கின்றது. அத்துடன் கட்டங்கள் ஒவ்வொன்றும் எப்பொழுதும் ஓர் ஒழுங்கு முறையில் ஒன்றை இன்னொன்று தொடரும் என்றும் சொல்லமுடியாது. இருந்த போதிலும் இறுதி மீளிணக்கத்தை அடைவதில் அவசியமாக அவை மீண்டும் கூட்டுச் சேரும்.

### *கட்டம் 1 - வன்செயலற்ற சகவாழ்வின் மூலம் பயத்தை அகற்றுதல்*

சுடுதல் எப்பொழுது நிறுத்தப்படுகின்றதோ அப்பொழுது பகைமையிலிருந்து விடுபட்டு வன்செயலற்ற சகவாழ்வுக்கான முதல் அடி எடுத்து வைக்கப்படுகின்றது: இதன் குறைந்தபட்ச வரைவிலக்கணம் யாதெனில் ‘‘வாழ், வாழ விடு’’ என்பதுடன் பிரிந்திருந்த வற்றை தொடர்புபடுத்துவதற்கான அடிப்படையை ஆரம்பிப்பதுமாகும். அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள், அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சமய நிறுவனங்கள் அத்தகைய தொடர்பை முன்னேற்ற வேண்டும். குறைந்தபட்ச பௌதீக பாதுகாப்பை உறுதிப் படுத்துவதில் உள்ளூர் அல்லது சர்வதேச அரசியல் கொள்கை வகுப்பாளர்களுக்கு ஒரு கடப்பாடு உண்டு.

### *கட்டம் 2 - பொறுப்புணர்வையும் நம்பிக்கையையும் கட்டி எழுப்புதல்*

இதன் வேண்டுதல் என்னவெனில் ஒவ்வொரு தரப்பும் பாதிக்கப்பட்டவரோ, குற்றமிழைத்தவரோ தமக்குள்ளும் மற்றவர்களுடனும் நம்பிக்கையை மீண்டும் உருவாக்குவதாகும். அத்துடன் மற்றவர்களது மனிதத்துவத்தை அங்கீகரிப்பதுமாகும். இதுவே அடிப்படையான பரஸ்பர பொறுப்புணர்வாகும். அதே நேரத்தில் இந்தக்கட்டத்தில் பாதிக்கப் பட்டவர்கள், தீயசெயல்களில் ஈடுபட்டவர்களின் மத்தியிலுள்ள குற்றவாளிகளின் தரங்களை அடையாளம் காண்பதை ஆரம்பிக்க முடியும். இதனால் தனிநபர்களுக்கும் முழுச்சமூகத்திற்கும் இடையிலான வேறுபாட்டைக் கண்டுபிடிப்பதுடன் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ உள்ள போட்டிக் குழுக்களைச் சேர்ந்த தீய செயல்களில் ஈடுபடுவோரின் முன்னதாக நிலவிய திட்டங்களுக்கும் சவாலாக அமைகின்றது. பௌதீகரீதியான பாதுகாப்பு வன்செயலை இல்லாதொழிப் பதுடன், நம்பிக்கையைக் கட்டியெழுப்பு வதற்குத் தேவையான முன் நிபந்தனையான அரசியல் வளர்ச்சியையும் ஆரம்பித்து வைக்கின்றது.

### *கட்டம் 3 - மற்றையவர்களை உணர்ச்சிபூர்வமாக உள்வாங்கிக் கொள்ளல்*

உண்மை கூறுதல் என்பது மீளிணக்கத்திற்கு ஒரு முன்நிபந்தனையாக இருப்பதுடன் மக்கள் கடந்த காலத்தில் பங்காளிகளாகப் பெற்ற துன்பத்தையும் மற்றும் கூட்டுப்பொறுப்பையும் திரும்பிப் பார்ப்பதற்கான குறிக்கோளுடைய சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்துகின்றது. சமாதான சகவாழ்வைப் பொறுத்த வரையில், நிலைத்து நீடிக்கக்கூடிய வகையில் நம்பிக்கையை உருவாக்கா விட்டால், அரசியல், சட்ட, பொருளாதார விடயங்களில் அமைப்புரீதியான அநீதிகள் தொடரும். எனவே ஒரு மீளிணக்க வழிமுறையானது, படிப்படியான அதிகாரப் பகிர்வினால் ஆதரவளிக்கப்பட வேண்டும். ஒருவர் மற்றவரின் அரசியல் ஈடுபாட்டைக் கௌரவிக்க வேண்டும். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், பொருளாதார நீதியை நிலைநாட்டுவதற்கும் உதவுகிற சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்குமான கூட்டுப் பொறுப்பு முறையை ஏற்கின்ற பொது இணக்கப்பாடு ஏற்படுத்தப்படவேண்டும்.




### *மீளிணக்கத்துக்கான வழிமுறையின் உரிமை*

அதிகாரிகள் வழமையாக மீளிணக்க வழிமுறைத் திட்டங்களை உருவாக்கும் போது ஒரு அதிமேல் மட்ட அல்லது மிகவும் கீழ்மட்ட அணுகுமுறையைக் கையாள்கின்றனர். கீழ்மட்ட அணுகுமுறை சமுதாய அங்கத்தவர்களுக்கிடையில் உள்ளார்ந்த தனிப்பட்ட உறவுகளை மையப்படுத்துகின்றது. உள்ளூர், உள் நாட்டில் வளர்கின்ற மீளிணக்கமும் அடிமட்டத்தில் எடுக்கப்படுகின்ற முயற்சிகளும் அதன் வெற்றிக்கான அடிப்படையாகக் காணப்படுகின்றது. மேல்மட்ட அணுகுமுறையானது தேசிய மட்டத்திலான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்துப் பின்னர் அது வடிகட்டப்பட்டு, உள்ளூர் மட்டத்திலான நிலைமைகளை உருவாக்குகின்றது (துாண்டுகின்றது). ஒவ்வொருவரும் மற்றவரிலும் பார்க்க போட்டியிடுவதை பூர்த்தி செய்வதற்கு மேல்மட்ட, மற்றும் கீழ்மட்ட வழிமுறை நீண்டகாலத்துக்கு அத்தியாவசியமானது. சர்வதேச சமூகமானது, ஒரு முக்கியமான பங்கை வகிக்கின்ற அதே வேளையில் ஒரு ஜாக்கிரதையான கட்டுப்பாடான அணுகுமுறையைக் கைக்கொள்ள வேண்டும். இறுதியான மீளிணக்கமானது உள்நாட்டிலேயே உருவாகுவதாகும். எப்படியிருந்தபோதிலும் சர்வதேச சமூகமானது, உள்ளூர் மீளிணக்கத் திட்டங்களைக் கண்காணிப்பதுடன் ஆலோசனைகள், நிபுணத்துவம் மற்றும் பயிற்சிகள், பொருள்ரீதியான வளங்களை வழங்குதல் என்பனவற்றின் மூலம் ஆதரவளித்து உதவிசெய்யலாம்.

### *உரிய காலம்*

***மோதல் தவிர்ப்பின் ஒரு தீர்க்கமான பரிமாணமாக மீளிணக்கம் இப்பொழுது காணப்படுகின்றது.***

எப்பொழுது மீளிணக்கத்துக்கான சரியான நேரம்? கஷ்டமான முடிவுகளை உருவாக்கும்போது பின்வரும் பரிந்துரைகளைக் கொள்கை வகுப்பாளர்கள் கவனத்தில் எடுத்துப் பின்பற்ற வேண்டும்:

- ***அரசியல் முன்னுரிமைகளுக்கான காரணத்தினால் மீளிணக்கத்தை தாமதிக்கக்கூடாது.*** ஒரு மாற்றக் காலகட்டத்தில் அழுத்தங்கள் என்பது

அடிக்கடி அரசியல், பொருளாதாரம் என்ப வற்றுக்கு முன்னுரிமை கொடுத்து மீளிணக்கத்தை தாழ்நிலைக்குள்ளாக்கி விடும். சர்வதேச நிதி நிறுவனங்கள் அந்த அணுகுமுறையை உணர்வுபூர்வ மாகவோ, வேறு வழிகளிலோ கவனித்து பலப்படுத்தவேண்டும். ஆனால் கண்காணிப்பு மேற்கொள்ளப் படும்போது, ஸ்தாபிதமான நிலை யிலுள்ள பொருத்தமற்ற அரசியல், பொருளாதாரக் கட்டமைப்புகளின் மீளிணக்கத்தின் நீண்டகால எதிர்பார்ப்பு களை சேதப்படுத்துவதாகவோ அல்லது மீளிணக்க நிகழ்ச்சி நிரலை நழுவிப் போக வைப்பதாகவோ இருக்கக் கூடாது. முகவரியில்லாத தீங்குகளும், அநியாயங்களும் தோன்றி வளர்வது இறுதியில் சிறந்த அரசியல், பொருளாதாரச் சீர்திருத்தங் களைக் குழிபறிப்பதாகவே முடியும். இதை ஆரம்ப நிலையிலேயே தடுப்பதற்கு குறைந்தபட்சம் தற்காலிக மீளிணக்க நடவடிக்கைகளை கைக்கொள்ள வேண்டும்.

- *ஒரு நீண்ட தூரப்பார்வையைக் கைக்கொள்ளல்.* எப்படியிருந்த போதிலும், தலைமுறைரீதியான நிதானமான நீண்டகால வேலையை ஏற்றுக் கொள்வதின் மூலமே ஒரு வெற்றிகரமான குறுகியகால மற்றும் நடுத்தரகால மீளிணக்கத்தை ஏற்படுத்த முடியும். இது சம்பந்தமாக சர்ச்சைக் குரிய மூன்று கருவிகளானவை: கல்வி (மோதலும் அதனுடைய நோக்கம் பற்றிய விளங்கிக் கொள்ளலை முன்னேற்றுதல், மற்றும் அனுபவம், இனத்துவம், மதம், அரசியல் நம்பிக்கைகள் போன்றவற்றைப் பற்றிய சகிப்புத் தன்மை), ஞாபகார்த்தம் (உதாரணத்திற்கு பாதிப்புக்குள்ளாகி மரணமானவர்களை நினைவு கூர்வதற் கான நிரந்தர ஸ்தூபி, நினைவுகூரும் இடங்கள், நினைவு நிலையங்கள், நாடகங்கள், கவிதைகள்: எல்லாம் சேர்ந்த பரிமாணம் துன்பத்தைக் கொடுப்பன. அத்துடன் சமாதான முறைமையை நீடித்துச் செல்லும் நிலையை உருவாக்குவன), மற்றும் பரஸ்பர மன்னிப்பு (மாற்றத்துக்கான பொறுப்பையும் ஈடுபாட்டையும் உண்மையாகவே ஏற்றுக்கொள்வதை உள்ளடக்குவது.)
- *அந்த நேரம் மட்டும் மீளிணக்கப்பாடு வந்துவிடாது.* மீளிணக்கத்தின் அவசியமான கட்டங்களான உண்மையைத் தேடுதல், நீதி மற்றும் நஷ்டஈடு என்பன லேசாக முடிந்து போகக்கூடிய ஒன்றல்ல. வன்செயல் நிறைந்த கடந்த காலம் மறைந்து போனாலும் அதன் சுவாலையானது இடையிடையே கொழுந்து விட்டெரியும் சாத்தியம் உடையது.

## 3 மீளிணக்கத்துக்கான சந்தர்ப்பம்

*சுய அபிலாசைகளை நீக்குவது பிளவுபட்டுள்ள நிலையில் மீளிணக்கத்துக்கான வழிமுறையை எளிதாக்குவதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.*

விசேஷமான சம்பந்தமுள்ள ஜீவாதாரமான விடயங்கள் எல்லாவற்றையும் முன்ன தாகவே நிரல்படுத்த முடியாது. எனினும் அவற்றை உள்ளடக்க முடியும்.

- *கடந்த கால மரபுரிமைப்பண்பு.* ஒரு மீளிணக்க வழிமுறையை அடைவதற்கு சரித்திரத்தில் எவ்வளவு தூரம் பின்னோக்கிச் செல்ல வேண்டும்? மனதில் வாழுகின்ற நினைவுதான் உண்மையான எல்லையா? அல்லது வரலாற்றுத் தவறுகளை திருத்தி அமைக்க முடியுமா? பலரால் வேரூன்றப்பட்ட குழப்பகரமான சமூக வரலாற்றை கணக்கில் எடுப்பதன் மூலமே ஓர் உண்மையான சமநிலையை ஏற்படுத்த முடியும்.
- *கடந்தகால வன்செயலின் தீவிரத் தன்மை* சம்பந்தப்பட்டவர்களில் பொறுப்பானவர்கள் மீது ஆழமான நேரடிப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன்,

பிரச்சினையை வெளிப்படுத்தும் அளவிலும் பகுதி வரையறையைச் செலுத்துகின்றது. தீவிரத்தன்மையானது எதிர்கால நம்பிக்கை அல்லது நம்பிக்கையின்மையின் தரவளவை வழி நடத்துவதுடன் மீளிணக்கம் மீதான பொது மக்களின் அக்கறையின் அவசியத்தையும் வலியுறுத்துகின்றது.

- *பௌதிகரீதியான அழிவின் பரப்பளவு.* மீளிணக்கத்தை (அல்லது வேறு ஏதாகிலும்) அமுல்படுத்துவதற்கான தர்க்கரீதியான அல்லது வளங்களின் ஆற்றல்களைப் பொறுத்த வரையில், முன் முயற்சிகளானது நாட்டின் தற்போதைய அல்லது திட்டமிடப் பட்டுள்ள பொருளாதார நிலையிலேயே தங்கியுள்ளது. திட்டமிடுதல் யதார்த்த பூர்வமானதாகவும், சாத்தியமான தாகவும், விமோசனமளிக்கக்கூடிய தாகவும் இருக்க வேண்டும்.
- *அரசியல் மாறுதலுக்கான மாதிரி வகை.* முன்பு ஒரு காலத்தில் அடக்குமுறை ஆட்சியாக இருந்து அது பலாத்காரத்தால் முழுமையாகத் தூக்கியெறியப்பட்ட சூழலிலும் அல்லது ஒரு உள் நாட்டு யுத்தம் தீர்க்கமான இராணுவ வெற்றியை அடையும் போதும் பழிக்குப்பழி வாங்கும் எண்ணத்துடன் தண்டனை விதிக்கும் அமைப்புகள் பற்றிய போக்கு அதிகரித்துக் காணப்படும். முன்னைய ஆட்சியில் இருந்த சீர்திருத்த வாதிகளின் முன்முயற்சியினால் மாற்றம் வருகின்ற வேளையிலும், முன்னைய ஆட்சியை தீர்க்கமான முடிவுக்குக் கொண்டு வருவதில் அதிகாரமிக்க முன்முயற்சியை எடுத்து பங்குவகித்தவர்களும் மன்னிப்பை வழங்கி சுய-பாதுகாப்பை வழங்க ஊக்குவிக்க வேண்டும். கூட்டுப் பேச்சுவார்த்தையின் விளைவாக மாற்றம் நிகழுகின்ற போது, சமத்துவ அடிப்படையிலான பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்திற்கு வாய்ப்புண்டு. இறுதியாக மாற்றமானது, ஒரு புதிய, சர்வவல்லமையுள்ள ஆட்சியை உருவாக்கும் போது, அது கூட மீளிணக்கத்துக்கான வழிமுறையில் தாக்கத்தை ஏற்படுத்தும். புதிய அரசுக்கு மிகப் பெரும் அதிகாரம் இருப்பதால், மீளிணக்கத்தை வலியுறு த்துவதுடன், தமது குற்றச் செயல் களுக்காக முன்னைய ஆட்சியாளர் களை நீதிமன்றத் தண்டனையை ஏற்கும்படி நிர்ப்பந்திக்கவும் கூடும். இது இப்பொழுது பாதிப்புக்குள்ளாகியிருக்கும் முன்னைய ஆட்சியாளர்களின் உணர்ச்சிகளை லேசாகக் கிளறிவிடக் கூடும்.
- *குறுக்குவெட்டான அபிலாசைகள்.* பிளவுபட்டுப் போன பகுதிகளுக்குள் இருக்கின்ற உப குழுக்களின் மத்தி யில் நிலவுகின்ற சுய அபிலாசைகள் மீளிணக்கத்தையும் சமூகங்களுக்கிடை யிலான ஒத்துழைப்பையும் மட்டுப் படுத்திவிடும். யுத்தத்தின் போது இரு பக்கங்களிலும் இருந்த பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து, சமூக அதிகாரத்தில் அவர்களுடன் சமபங்கு கோரிக்கைகளை முன்னெடுப்பது சிறந்ததாகும். தொழிலாளர் குழுக்கள் ஒன்றிணைந்து சமூகத்தில் ஒரு மிகவும் முக்கியமான அழுத்தக் குழுவாக அமையலாம். வர்த்தக, கைத்தொழில் நலன்கள், ஒவ்வொருவரினதும் மனித, நிதி, இயற்கை வளங்களுக்கு விசால மான ஒன்றிணைந்த சந்தையின் மூலம் சிறந்த சேவையாற்றலாம். ஏழை மக்கள் தமது ஒற்றுமையின் மூலம் தமது வளங்களைப் பெருக்கி, கூடுதலான வளப்பங்கீட்டுக்காகப் போராடலாம். மக்கள் மத்தியில் ஒரு பொதுவான மதரீதியான அல்லது மொழிரீதியான தொடர்புகள் இருக்கு மாயின் அது அடிப்படையில் பிளவில் இருந்து விடுவித்து மக்களுக்கிடையில் ஒரு பக்கத்தை உருவாக்கும்.

- மீளிணக்கத்தைப் பொறுத்த வரையில் *சர்வதேச சமூகமானது* ஒரு தகவல் வளமுள்ளதாகவும், திறமை மற்றும் பயிற்சியுள்ளதாகவும் இருக்கின்றது. அத்துடன் சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின்

படிமுறையான வளர்ச்சியானது சர்வதேச சட்ட ஒழுங்கை உருவாக்கியுள்ளதுடன், நீதி சம்பந்தமான அடிப்படை விடயங்களில் புறநிலையான ஒற்றுமை ஆதரவை உருவாக்கியுள்ளது.

- *கலாசாரம்* தனது பழக்கவழக்கங்களுடனும் கலாசாரத்துடனும் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ள வன்செயல் நிறைந்த கடந்த காலத்தைக் கொண்டுள்ள ஒரு சமூகம் எவ்வாறு அதை கையாள்வது என்ற பிரச்சினை, குறிப்பாக கூட்டு நினைவலை முறைமையில் கலாசாரத்தின் தாக்கம், அதே வேளையில் உள்நாட்டு மீளிணக்கத்தை உருவாக்குவதில் இது செழுமையான வளமாகும். அதாவது வெளியிலிருந்து உடன்தயாரிப்பான பதில்களை எதிர்பார்ப்பதை விட இந்த “உள்” கருவிகளும் தீர்வுகளும் வளமானவை.

## 4 பாதிக்கப்பட்டவர்கள்

மீளிணக்க வழிமுறையில் பாதிக்கப்பட்டவர்களே அதன் இதயமாவர். ஆனால் அவர்கள் யார்? அவர்கள் பொதுவாக ஒன்றாக இருப்பினும், அவர்களது அனுபவங்கள், தேவைகள், ஆற்றல்கள் என்பன பெருமளவில் மாறுபாடானவை. நேரடிப் பாதிப்புக்குள்ளானவர்கள் வன்செயலின் நேரடித் தாக்கத்தினால் பாதிப்புக்குள்ளானவர்கள் ஆவர். மறைமுகப் பாதிப்புக்குள்ளானவர்களின் நேரடியாகப் பாதிக்கப்பட்டோரின் தொடர்புகள் காரணமாக துன்பத்திற்குள்ளானவர்கள். முதலாவது தலைமுறையின் பாதிக்கப்பட்டவர்கள் தமது வாழ்நாள் காலத்திலேயே துன்பத்திற்குள்ளானவர்கள். ஆனால் அவர்களது பிள்ளைகள் அதாவது ‘இரண்டாவது தலைமுறையினர்’ துன்பத்தையும் சோகத்தையும் தம்மகத்தே கொண்டு வாழ்வதால் அது சமூகத்தின் எதிர்காலத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது. காட்டுமிராண்டித்தனமான மோதலானது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே அழுத்தமான வேறுபாட்டையும் உண்டு பண்ணியுள்ளது. ஏனெனில் பாதிப்பானது ஒரு பகுதி ஆண் பெண் (பால்நிலை) என்ற வகையிலும் விசேடமானது. சிறுவர்களைப் பொறுத்த வரையில் அதுவும் குறிப்பாக அகதிச் சிறுவர்கள், சிறுவர் படையினரைப் பொறுத்த வரை மிகவும் ஆதரவற்றவர்களாவர். ஒவ்வொரு வகையினரும் வித்தியாசமான வகையில் அல்லது முறைகளில் மீளிணக்கத்தை வேண்டி நிற்கின்றனர்.

***பாதிக்கப்பட்டவர்களுக்கான வரைவிலக்கணம்.*** பாதிக்கப்பட்டவர் யார் என்னும் பிரச்சினைக்கான வரைவிலக்கணத்தில் மூன்று சிக்கலான அம்சங்கள் இருப்பதைக் காணலாம்.

- *சமூக அரசியல் கூறுகள்.* அரசியல், காலம், பொருளாதாரம் போன்ற தடைகளால் துன்பத்தில் வீழ்ந்தவர்களைத் தவிர்த்தே உத்தியோகபூர்வ முகவரகங்கள் பாதிக்கப்பட்டவர்களை வகைப்படுத்துகின்றன. உண்மையில் பாதிப்புக்குள்ளான பகுதியினரில் ஒரு பிரிவினரே கவனத்தையும் மீள் இழப்பீட்டையும் பெறுகின்றனர். பாதிக்கப்பட்டவர்களை வரையறுப்பதில் உள்ளூர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் பங்களிப்பை வழங்கியுள்ளன. அமைதியான, வெளியே தெரியாத பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது உதவி ஒரு குரலைக் கொடுத்தாலும் அவர்களது ஈடுபாடு எப்பொழுதும் நடுநிலையானது என்று கூற முடியாது.
- *சட்ட வியாக்கியானம்.* 1999ன் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களை ஈடுசெய்யும் மனித உரிமை பிரகடனம் பிரகடனத்துக்கான ஐ.நா.ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ளது. ஒரு தொகை சர்வதேச வரைவிலக்கணங்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன. யூகோஸ்சிலோவாக்கியா, றுவண்டா சம்பந்தமான சர்வதேச

நீதிமன்றங்களுக்கும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குமான சாசனங்களும் பொதுவான உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளன. மோதலுக்குப் பிந்திய ஓர் அரசின் குற்றவியல் சட்டமானது சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டமும், அரசின் மரபுரீதியான உள்நாட்டு மதரீதியான சட்டமும் இணைந்து பொருத்தமான வரைவிலக்கணத்தை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. பொதுவாக தேசிய சர்வதேசிய நீதிமன்றங்களும் நீதிபதிகளும் யார் தீங்கு செய்தவர், யார் பாதிக்கப்பட்டவர் என்பதைத் தீர்மானிக்கின்றனர்.

- *கலாசாரம்.* மறைமுகமாகப் பாதிக்கப்பட்டவர் மீதான கலாசாரப் பாதிப்பை நாம் எவ்வாறு வரைவிலக்கணம் செய்வது? உதாரணமாக 'குடும்பம்', 'சமூகம்' என்பவற்றின் வீச்சை எவ்வாறு வரைவிலக்கணம் செய்வது?

***பாதிக்கப்பட்டவர்களைத் திரட்டுதல்.*** பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகாரமளிப்பது முக்கியமானது. இந்த விடயத்தில் பாதிக்கப்பட்டவர்களின் சங்கங்கள் அடிப்படையானவை. அவை அழுத்தக் குழுக்களாகச் செயற்பட முடியும். பொது மக்களின் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க முடியும். சட்ட உதவியை அளிக்க முடியும். கௌரவத்தையும் சுயநம்பிக்கையையும் மீட்கமுடியும். ஆனால் அதே வேளையில் அவை குற்றவாளி களுக்கு கட்டுப்பாடான மன்னிப்பை வழங்கி அவர்களை மீள இணைய வைத்து, எதிர்கால நம்பிக்கையை சிதைக்கும் வகையில் கடந்த காலத்தை மீட்டு, மீளிணக்க நடவடிக்கைகளுக்கு எதிரான இயக்கத்தையும் இடையூறுகளையும் கூடச் செய்யவும் முடியும்.

***மாற்றத்திற்கான பாத்திரங்கள்.*** அங்குள்ள சூழ்நிலைகளாவன: உதாரணம்: புருண்டி, பொஸ்னியா என்பவற்றைப் பொறுத்தவரையில் ஆக்கிரமிப்பாளர்களினதும் பாதிக்கப்பட்டவர்களினதும் பாத்திரங்களை மாற்றியமைக்கும் வகையில் குற்றவாளிக்கும் பாதிப்புக்குள்ளானவருக்கும் இடையில் நீண்ட காலமாகவும் ஒன்றுக்கு மேற்பட்ட வகையிலும் பரிமாற்றங்கள் நிகழ்ந்தன. இக்கடினமானதும் சக்திவாய்ந்ததுமான செயல் ஒவ்வொருவரிடமும் பாதிக்கப்பட்டவர் என்ற எண்ணத்தை அகற்றியதுடன் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொடுத்தது.

***பாதிக்கப்பட்டவர்களினதும் குற்றவாளிகளினதும் பாத்திரத்தை மாற்றுதல் என்பது மீளிணக்கத் திட்டங்களைத் தயாரிப்பதிலும் தீர்மானிப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் முக்கியமாகக் கவனத்தில் எடுக்க வேண்டியதாகும்.***

கொள்கை வகுப்பாளர்களுக்கு பொதுவாக அனுபவரீதியான சிபாரிசுகளை அவை வழங்குகின்றன.

- பாதிக்கப்பட்டவர் பற்றிய குறிப்பான வரைவிலக்கணத்தைத் தெரிவு செய்வதில் பயன்மிக்கவையாகவுள்ளன.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய அவர்களுடைய தனிப்பட்ட உணர்வுகளை மதித்தல்.
- பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு மாறுபட்ட கட்டங்களுக்கூடாக இயல்பு நிலையை திரும்பவும் அடைவதை அங்கீகரித்தல்.
- சுகாதார நலன், கல்வி, வீடமைப்பு போன்ற துறைகளில் கூட்டு நடவடிக்கைகளை வழங்குவதன் மூலம் அது நஷ்டஈட்டுத் திட்டங்களில் தவறவிடப்பட்ட பலரையும் உள்ளடக்கி முழுச் சமூகத்திற்கும் உதவியளிக்கின்றது.
- அயல் நாடுகளில் அகதிகளாகத் தங்கியுள்ள பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளைச் செவிமடுத்தல்.

## 5 குற்றவாளிகள்

குற்றவாளிகளைப் பொறுத்த வரையில் அவர்களது நடவடிக்கைகளில் 'ஏன்', 'எப்படி' என்பதைப் பொறுத்து அவர்களுக்கு மன்னிப்பு அளிப்பது ஒரே வகையானதாக இருப்பதில்லை. ஆனால், எந்த ஒரு மீளிணக்கக் கொள்கையிலும் இது ஒரு முன்நிபந்தனையாகும். அவர்களது குற்றத்தின் வேறுபாடு, அவர்களது மனோபாவம், மற்றும் அவர்களது குற்றங்களைப் பொறுத்து அவர்கள் மீதான மீளிணக்கக் கொள்கையும் வேறுபாடான அணுகுமுறையைப் பிரதிபலிக்கும் வகையை வேண்டி நிற்கிறது.

### *'பிரதான' மற்றும் 'மறைமுக' குற்றவாளிகள்*

*பிரதான* குற்றவாளிகள் அவர்களது விசேட குற்றச்செயல்களுக்காக குற்றம்சாட்டப் பட்டவர்கள். *மறைமுகக்* குற்றவாளிகள் பெரும்பாலும் கூடுதலாக அரசியல் அல்லது இயல்பான மனோநிலைரீதியில் குற்றமிழைத்தவர்களாவர். (அ) மற்றவர் களின் குற்றங்களின் விளைவாக முன்னேற்றங்களை அனுபவிப்பதன் மூலம் (ஆ) வன்செயல்களைக் கண்டும் செயலற்று இருப்பதின் மூலம் (இ) எதேச்சையான தீய செயல்கள் மூலமும்.

அமைதியான, மறைமுகமான நன்மை பெறுவோர் துஷ்பிரயோகம் செய்வதோ, கொலை செய்வதோ இல்லை. அவர்கள் வேலைகள், வருமானம், வீடு, கல்வி, அந்தஸ்து, அரசியல் அதிகாரம் இன்னோரன்னவை போன்ற அருமையான வளங்கள் ஒதுக்கப்படும் போதும் கடந்த காலத்தில் லாபம் பெற்றவர்களாவர். நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் இந்த நன்மைகள் அடிக்கடி தொடர்வன. அவர்களுடைய பொறுப்புடைமை மீளி ணக்க வழிமுறையின் போது கவனத்தில் எடுக்கப் படுகின்றதேயொழிய மற்றும்படி விநியோகம், சமூகநீதி என்பன தொடர்ந்து மாறுபட்ட குறிக்கோள் உடையதே. வேடிக்கை பார்ப்பவர்களும், பார்வை யாளர்களும் வன்செயல் நடவடிக்கைகள் முன்னுக்கு வருகின்றபோது செயலற்று இருப்பதன் மூலம் அதற்கு உதவி புரிகின்றனர். அவர்களுக்கு என்ன நடக்கின்றது எனத் தெரிவதில்லை, அல்லது எதையும் தெரிவு செய்வதில்லை, மௌனமாக இருக்கின்றனர். சில வேளை களில் வேடிக்கைப் பார்ப்பவர்கள் சர்வதேச சமூகத்துடன் இணைகின்றனர்.

குற்றவியல் நீதிமன்றங்கள் தனிநபர் குற்றங்களைக் கையாளுகையில் உண்மையறியும் ஆணைக்குழுக்கள் கூட்டுக்குற்றங்களை அறிகின்றன. பல சந்தர்ப்பங்களில் மத அமைப்புகள், நீதித்துறை, வைத்திய அதிகாரிகள், வர்த்தக மற்றும் ஊடகத்துறையினர், வேடிக்கைப் பார்ப்போர், பயன்பெறுவோர் கூட பயன்பெறும் வகையில் கூட்டான முறையில் மனித அநீதிக்கு பங்களிப்புச் செய்துள்ளனர்.

### *குற்றவாளிகளை வகைப்படுத்தல்*

குற்றவாளிகள் பற்றிய தகவல் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். முதலாவது நடவடிக்கையாக குற்றங்களின் வீச்சைப் பொறுத்து குற்றவாளிகள் வகைப்படுத்தப்பட வேண்டும். இது சிக்கலானது. சனத்தொகை யின் பெரும்பான்மையோர் மனித உரிமை மீறல்களில் பங்குபற்றியோராக இருக்கக் கூடும். பதிவுகள் சேதமாக்கப்பட்டிருக்கும் புதிய ஆட்சிக்குத் தேவைப்படும், சட்டவலு இல்லாததாயிருக்கும். கீழே உள்ளது வகைப்படுத்தலுக்கான உதாரணங்களைக் காட்டுகிறது.

**குற்றங்களின் வகைகள்**

*சர்வதேசக் குற்றங்கள்* (குற்றங்களா னவை மனித இனத்தின் பாதுகாப்பிற்கும் சர்வதேசப் பாதுகாப்பிற்கும் பயமுறுத்தலா னவை. இவற்றை எந்த உடன்படிக்கையினாலும் உள் நாட்டுச் சட்டத்தினாலும் திருத்தி யமைக்க முடியாது):

● *மனித இனத்திற்கு எதிரான குற்றம்* என்பது, நாகரீகமுள்ள மக்களுக்கு எதிராக பரந்த அளவிலும் திட்டமிட்டும் இழைக்கப்படும் குற்றமென 1988ம் ஆண்டு ICC (அத்தியாயம்-7) பிரகடனத்தில் வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளது. அவையாவன: கொலை, நாசவேலை, அடிமைப் படுத்தல், நாடு கடத்தல் போன்ற சர்வதேச சட்டத்தின் அடிப்படை விதிகளை மீறும் வகையில் பௌதீகச் சுதந்திரத்தை தீவிரமாக ஒடுக்குதல், சித்திரவதை, பாலியல் வல்லுறவு, பாலியல் அடிமைத் தனம், பலவந்த விபச்சாரம், பலவந்தமாக கருத்தரிக்க வைத்தல், மலடாக்குதல் மற்றும் எல்லா வகையான பாலியல் வன்செயல்கள், துன்புறுத்தல், நபர்களைக் காணாமல் போகச் செய்தல், நிறபேதம் அல்லது அதுபோன்ற மனிதத் தன்மையற்ற செயல்கள்.

● *இனப்படுகொலை* (ICC அறிக்கை, அத்தியாயம்- 6) என்பதன் அர்த்தம், ஒரு தேசிய இனம், இனக்குழுமம், சாதி, மதக்குழு போன்றவற்றை முழுமையா கவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ திட்டமிட்டு அழிக்கும் வகையில் அக் குழுவின் உறுப்பினர்களைக் கொல்லுதல், கடுமையாக உடல் அல்லது மனோரீதி யான துன்பத்தை உண்டுபண்ணுதல், அவற்றின் வாழ்க்கை நிலைமைகளை முழுமையாகவோ பகுதியாகவோ திட்ட மிட்டமுறையில் அழித்தல், அக்குழுவின் குழந்தைப்பிறப்பு வீதத்தை தடுக்கும் நடவடிக்கை களை எடுத்தல் அல்லது குழந்தைகளை ஒரு குழுவிலிருந்து இன்னொரு குழுவிற்கு கடத்துதல் என்பனவாகும்.

● *யுத்தக் குற்றங்கள்* (ICC பிரகடனம், அத்தியாயம்-8) கடுமையான மீறல்களை வரைவிலக்கணம் செய்கின்றது. 1949 ஆகஸ்ட் 12 ஜெனீவா மாநாட்டினதும் ஏனைய சர்வதேச மனிதாபிமான சட்டங்களையும், சர்வதேச அல்லது உள்நாட்டு இராணுவ மோதல்களின் போது மீறுவது, குறிப்பாக போரில் தீவிரமாக ஈடுபடாத மக்களுக்கு எதிராக இச்சட்டங்களைப் பிரயோகிப்பது. (உ+ம்: பொதுமக்கள் அல்லது கைதிகள்)

***மனித உரிமைகளை நேரடியாக மீறுதல்*** (மனித உரிமைகளை தீவிரமாக மீறுதல், உ+ம்: அரசாலும் அரசசார்பற்ற முகவரகங் களாலும் இழைக்கப்படுகின்ற சித்திரவதைகள், காணாமல் போதல்) இந்த வகையினால் ஏற்படுத்தப்படுகின்ற நடவடிக்கைகள் பரந்தளவிலான அல்லது திட்டமிடப் பட்ட தாக்குதலின் ஒரு பகுதியாக இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை யாகையால் இது மனித இனத்திற்கு எதிரான வித்தியாச மான குற்றங்களாகும்.

***இணைந்த மீறல்கள்***
இவை நேரடியான மனித உரிமை மீறல்களாக இல்லாவிடினும் அதே விதமான இழப்புக்களை ஏற்படுத் துவன (உ+ம்: இறந்த உடல் களைச் சேதமாக்குவது, வல்லுறவு உட்பட பாலியல் துன்புறுத்தல் செய்வது, வைத்திய கவனிப்பு போன்ற அவசியமானவற்றை கவனிக்காது விடுதல், வியாபார த்தை நாசப்படுத்துவது, வேலை யிலிருந்து கட்டாயமாக விலக்கு தல்.)

குற்றவாளிகள் உத்தரவுகளின் கீழ் அல்லது பயமுறுத்தலின் கீழ் செயற்படுகின்றனர். அல்லது அவர்களது நடவடிக்கைகள் அந்த நேரத்தில் சட்டவிரோதமாக இருக்கவில்லை. வெறுப்பூட்டும் சொற்பொழிவால் அவர்கள் தாமாகவே “பாதிப்பு” அடைந்து சாதாரண பிரஜைகள் என்ற நிலமையிலிருந்து மனித உரிமைகளை மீறுபவர்களாக மாறுகின்றனர். ஏற்கனவே நிலவுகின்ற தண்டனைக் கலாசாரமும் சில வகையான வன்செயல்களை உருவாக்குகின்றது.

ஒரு வழக்கமான சொல்லலங்காரம் “நாங்கள் யுத்தத்தில் இருக்கின்றோம்” என்பது. கருத்தியல்ரீதியாகவும் உண்மையாகவும் இலட்சியத்திலுள்ள நம்பிக்கை அதே வழியிலேயே செயற்படுகின்றது. வன்செயல் உந்துதலும் பழிவாங்குதலும் அவாக்கொள்கின்றது. முன்னைய வன்செயல்களுக்குப் பதிலாக புதிய வன்செயல் நியாயப்படுத்தப்படுகிறது, வேண்டப்படுகிறது. அரச வன்முறை தன்னுடையதை சுதந்திரத்துக்கான போர் என்று கூறுவது போல அரச சார்பற்ற வன்முறைச் செயற்பாட்டாளர்கள் தம்முடையதை “அரசியல் நோக்கத்திற்கான வன்முறை” என நியாயப்படுத்துகின்றனர். பொதுவாக வன்செயல் மனோ பாவத்திற்கான விடயத்தை எடுத்துப் பார்த்தால் பெரும்பாலான சாதாரண மக்கள் தம்மை சுதந்திரப் போராளிகளாகவும் விருப்பற்ற வீரர்களாகவும் பார்க்க வைக்கப்பட்டு “அசாதாரணமான” நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்ற உண்மையான விளக்கத்தைப் பெறமுடியும்.

அரசியல் நோக்கம் என்ற போர்வை, குற்ற நோக்கங்கள், போதைவஸ்துக்குக் கட்டுப்படுவதைத் தடுப்பது, சட்டவிரோத குடியேற்ற வழிமுறைகள் அல்லது கடத்தல் செயற்பாடுகள் என்பவற்றை மூடிப்போர்த்து விடுகின்றது.



*இடம்பெற்ற வன்செயலின் முக்கியத்துவத்தை குற்றவாளிகளுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இடையில் நிலவுகின்ற அளவு, இடைவெளி எடுத்துக் காட்டுகின்றது.*

தம்மால் பாதிக்கப்பட்டவர்களுடனும் தமது சமூகத்துடனும் குற்றவாளிகள் மீளிணக்கம் காணுவதற்கு என்ன உதவியை செய்ய முடியும்? இது பெரும்பாலும் குற்றவாளிகளின் போக்குகளிலும் நிலைமையிலுமே தங்கியுள்ளது. சில வேளைகளில் இவை மீளிணக்கத்திற்கு பாரதூரமான இடையூறுகளை உண்டாக்கக்கூடும். எப்படி இருப்பினும் சரியான சூழ்நிலைகளில் இது கவனமாக முன்னெடுக்கப்படும் போது குற்றவாளிகளைக் கஷ்டப்பட்டு மீளிணக்கத்தை நோக்கி அடியெடுத்து வைக்கப்பண்ண முடியும்.

**மீளிணக்கத்தின் மீதான இடையூறுகள்.**

- *குற்றமிழைத்ததை ஒப்புக்கொள்ள மறுப்பது.* பல்வேறு பேச்சுக்களின் அடிப்படையிலான குற்றத்தையும், பொறுப்பையும் நிராகரித்தல். (மேலே உள்ள ‘மனோபாவம்’ என்பதைப் பார்க்கவும்)
- இடம்பெற்ற வன்செயலின் முக்கியத்துவத்தை குற்றவாளிகளுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இடையில் நிலவுகின்ற *‘அளவு இடைவெளி’* எடுத்துக்காட்டுகின்றது. குற்றவாளிகள் தம்மால் இழைக்கப்பட்ட குற்றங்களின் முக்கியத்துவத்தையும் விளைவுகளையும் இணைத்து மதிப்பிடுகின்ற அதே வேளையில், பாதிக்கப்பட்டவர்கள் தமக்கு ஏற்பட்ட துன்பங்களை முழு அளவுக்கு உணர்வது.
- *பொறுப்பற்ற முறையிலான மன்னிப்பு.* குற்றவாளிகள் மன்னிப்புக் கோருவது கடினமானது. அத்துடன் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாது மன்னிப்புக் கோருவதென்பது பாதிக்கப்பட்டவர்களை உண்மையான

மீளிணக்கத்திற்கு இட்டுச் செல்லாது. பாதிக்கப்பட்டவர்கள் பல பூரணத்துவ மற்ற அவமரியாதையான மன்னிப்பைக் கண்டுள்ளனர்.

## *குற்றவாளிகளின் மீள் இணைப்பு*

குற்றவாளிகள் தமது சமூகத்துடன் மீள இணையும் குறிக்கோளுடையவர்கள். அவர்கள் சமூகத்திலிருந்து தொடர்ந்தும் வெளியிலிருப்பது எல்லா வகையிலும் சமூகத்தின் மீளிணக்கத்தையும், மீள் இணைப்பையும் பயமுறுத்தலுக்குள்ளாக்கு கின்றது.

**ஏன் மீள் இணைப்பு?**

எல்லா குற்றவாளிகளும் உடனடியாகவோ அல்லது காலம் தாழ்த்தியோ தமது சொந்த சமூகத்திற்குத் திரும்பி வருகின்றனர். தெளிவான மீளிணைவு நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் இந்தக் குற்றவாளிகளின் மீள்வருகையானது எஞ்சியிருக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீள் அதிர்ச்சியை ஏற்படுத்த வாய்ப்பாகி விடும். அதிகமாக விசேட காரணங்கள் மீள் இணைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும்.

- சிறைகள் அடிக்கடி மிதமிஞ்சிய சனத்தொகையால் நிறைந்தால் அது பொது வளங்களின் மீது தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்தும்
- நாட்டின் அவசியமான அரசியல், பொருளாதார மீள்கட்டுமானத்திற்குத் தேவையான மனித வளங்கள் மீதான தண்டனையை நிர்வாக மற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் நீக்க வேண்டும்.
- வெளிப்பயமுறுத்தல்களின் தொடர்ச்சி யானது, தேசிய மீளிணக்கத்தின் ஊடாக மக்களை வேகமாக மீள ஐக்கியப்படுத்துவதின் தேவையை அதிகரிக்கின்றது.
- பௌதீகரீதியாகவும் சமூகரீதியாகவும் குறிப்பிட்ட பிரிவினரை விலக்கி வைத்திருப்பது, அவர்களை சமூக, அரசியல் தனிமைக்கு இட்டுச்சென்று, ஜனநாயகத்திற்கு எதிரான உதிரி கலாசாரத்தையும், வலைப்பின்ன லையும் உருவாக்குவதில் தள்ளி விடும்.
- மிகவும் சூடான சூழ்நிலையை உருவாக்குவதில் ஒரு முக்கிய கூறாக விளங்கும் ஆயுதக் களைவை மீள் இணைப்பு உள்ளடக்க வேண்டும்.

**எவ்வாறு மீள் இணைப்பது?**

- *சட்ட மற்றும் நிர்வாக இடையூறை அகற்ற வேண்டும்.* இவை உள்ளடக்குபவை - பிணையில் விடுவது, தண்டனைகளையும் பொருளா தாரத் தடைகளையும் தள்ளுபடி செய்தல் அல்லது குறைத்தல், காரியாலய, குடியியல் உரிமைகள், புனர்வாழ்வு என்பவற்றை மீள வழங்குதல்.
- *மீள் சமூகமயமாக்கத்தை துரிதமாக முன்னேற்றுதல்.* நீண்டகால கல்வித் திட்டங்கள் மூலம் ஜனநாயகத்தினதும் மனித உரிமைகளதும் பெறுமதியை உணரவைத்தல்.
- *உள்ளூர் சமூக மட்டத்தில் குற்ற வாளிகளை மீள இணைத்தல்.* அரச சார்பற்ற நிறுவனங்களும், மத நிறுவனங் களும் மற்றும் சிவில் சமூகக் குழுக்களும் மற்றும் உள்ளூர் அதிகாரிகளும் சேர்ந்து குற்றவாளி களை பாடசாலைகள், வைத்திய சாலைகள், வீதிகள் போன்றவற்றை மீளக்கட்டும் சமூக அடிப்படையிலான திட்டங்களில் ஈடுபடுத்த வேண்டும்.
- *ஒத்துழைக்காத பாரம்பரிய நடை முறைகள்:* குற்றவாளிகள் சமூகத் திற்கு திரும்பி வருபவரை ஏற்றுக் கொள்ளும் பாரம்பரிய மத அடிப்படை யிலேயே மீள் இணைப்பு முன்முயற்சி கள் மேற்கொள்ளப்படுகின்றன. நவீன குற்றவியல் நீதி முறைமைகளின் தத்துவத்தின் பிரகாரம் உள்ளூர் சமூகங்களுக்கு அதிகாரம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளதுடன் எல்லா அதிகாரங்களும் அதிகாரிகளுக்கே வழங்கப்பட்டுள்ளன. மத சம்பிரதாய த்தில் குற்றவாளி திரும்பி வருவதற் கான சந்தர்ப்பம் உள்ளது. இந்த

அணுகுமுறை மீளவும் ஆரோக்கியமான நீதியை உருவாக்குவதற்கு ஒரு பரந்த நிலையின் ஒரு பகுதியாக அமைகின் றது (பிரிவு - 7ஐப் பார்க்கவும்).

குற்றவாளிகள் தமது பாதிப்புக்களிலிருந்து மீண்டும் ஒருமைப்பாட்டுக்கு வருவார்கள் என்பதற்கோ அல்லது தமது பிடியிலிருந்து விலகி வருவார்களென்பதற்கோ மீள் இணைப்புத் திட்டங்களில் எவ்வித உத்தர வாதமும் இல்லை. ஆனால், குற்றவாளிகள் தமது தனிமையிலிருந்து விடுபட்டு, சமூக அடிப்படையிலான முயற்சிகளில் இணையவும், தங்களது போக்குகளால் பாதிக்கப்பட்டவரின் நிலைமைக்கு தாங்களே பொறுப்பு என உணர்ந்து கொள்வதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பத்தை அவர்கள் உருவாக்கு கிறார்கள்.

## 6 குணமாக்குதல்

*இது மக்கள் தம்மீது மோதல் ஏற்படுத்திய அழுத்தத்தை கையாளுவதற்கு உதவுவதற்கு முக்கியமானது மட்டுமின்றி, துயரத்திற்கு காரணமாக உள்ளவற்றை அணுகுவதற்கும் அவசியமானது.*

மனக்காயம் தனிப்படவோ அன்றி கூட்டாகவோ சமூகத்தின் கட்டமைப்பு களைச் சிதைத்துள்ளது. உதாரணமாக ஒரு வருத்தத்திற்குரிய வழிமுறையின் ஊடாக, மோதல் காரணமாக மக்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தை அணுக உதவி புரிவது முக்கியமானது. அதே வேளையில் இது காரணமாயுள்ளவற்றையும் கையாள்வது அவசியமானது. ஒரு மன அதிர்ச்சியான நிலையிலும் அதன் பின்னரும் தனிப்பட்ட, அரசியல், சமூக, கலாசார பொறுப்புகள் மீது 'குணப்படுத்தலுக்கு' என்ன தேவை யென்பதைப் பார்க்க வேண்டும். கலாசாரம், கருத்துச் சுதந்திரம் என்பன மீதான அடக்குமுறை, இனத்துவ சகிப்புத் தன்மையின்மை, பாகுபாடு என்பன மோசமான முறையில் அடையாளத்தையும், நிறுவனங்களிலான உண்மை, சொத்து க்கள் என்பவற்றையும் கீழ்நிலைப்படுத்தி அல்லது சேதமாக்கியுள்ளன.

### *மீளிணக்கமும் குணப்படுத்தலும்*

குணப்படுத்தல் தனிப்பட்ட மட்டத்தில் செய்யப் படுகின்ற அதே வேளையில் அது சமூக அமைப்புடன் உள்ளார்ந்த தொடர்பையும் கொண்டிருக்கும். அரசியல் வழிமுறைகளும், தந்திரோபாயங்களும் தனிப்பட்ட குணப்படுத்தலுக்கான அமைப்பை உருவாக்குவதில் மீளிணக்கம் முக்கியமானதாக இருக்கின்ற அதே வேளையில், ஒவ்வொரு தனிப்பட்டவரதும் குணப்படுத்தலுக்கான பாதையும் சொந்தமானதும் தனிப்பட்டதுமாகும். அரசியல் வன்செயல்களின் போது, நேரடியாக உயிர் தப்பி வாழ்பவர்களின் முன்னால் அடிக்கடி செல்வதற்கு அரசியல்வாதிகளும் அரசியல் வழிமுறை களும் தயாராக இருக்க வேண்டும்.

### *குணப்படுத்தலுக்கான அணுகுமுறை*

ஒரு தனியான குணப்படுத்தல் வழிமுறை கிடையாது. ஆனால், துன்பத்துடன் மாறிக் கொண்டிருக்கும் ஒரு கலவையான சமூக உலகத்தில் தனிப்பட்டவர்களின் தேவை களில் கவனம் செலுத்த வேண்டும்.

- *சூழமைவை விளங்குதல்:* குணப்படுத்த லானது சமூக, கலாசார அமைப்பை ஏற்றுக்கொள்வதுடன் மொத்தத்தில் தனிப்பட்டவர்களுக்கேயானதாகும். அமைப்பு எப்பொழுதும் ஒரு குணப்படுத்தும் தந்திரோபாயத்தின் வளர்ச்சியை தொடக்கப் புள்ளியாகக் கொண்டிருக்கிறது.
- *உள்ளூர் வளங்களைப் பயன் படுத்தல்:* சில சமூகங்களும், தனி நபர்களும் மிக அதிகமான அளவுக்கு துரதிர்ஷ்டமான நிலையிலும் நல்ல கட்டுமான வேலைத் திறனுடனும் உள்ளனர். சாத்தியமான இடங்களில் உள்ளூர் கட்டுமான அமைப்பு முறைக்கு ஆதரவளிக்கலாம். அதே வேளையில் இருக்கின்ற பொறி முறையை அளவுக்கு மிஞ்சி மதிப்பீடு செய்யாமல் பார்த்துக்கொள்ளும்

தேவையும் உள்ளது. வன்செயல்களின் போது பாரம்பரிய பொறிமுறைகள் அடிக்கடி சேதப்படுத்தப்பட்டுள்ளன.

- *பரந்தளவிலான புனர்நிர்மாணத் திட்டங்களுடனான குணப்படுத்தலின் தொடர்பு:* உண்மை, ஏற்றுக்கொள்ளுதல், நீதி என்பன குணப்படுத்தும் வழிமுறையிலிருந்து வேறானவை அல்ல. தனிப்பட பாதிக்கப்பட்டவர்களுடன் வேலை செய்பவர்கள் ஒரு விசாலமான வழி முறையின் தேவையையும் உணர்ந்து கொண்டிருப்பர். குணப்படுத்தல் முயற்சிகளின் ஒரு பகுதியாக சமூக, பொருளாதார மற்றும் கலாசார புனரமைப்பை யுத்தத்திற்குப் பிந்திய காலகட்டத்தில் மேற்கொள்வதின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள், சமூக, அரசியல் அமைப்பை மீளுருவாக்கம் செய்து தமது அடையாளத்தையும் கௌரவத்தையும் மீளப் பெற உதவவேண்டும்.

### *குணப்படுத்தலுக்கான தந்திரோபாயங்கள்*

எல்லா தந்திரோபாயங்களும் உள்ளூர் அமைப்புகளிலிருந்தே உருவாகி வெளி வர வேண்டும். அதே நேரத்தில் பன்முகத் தந்திரோபாயங்களும் சமகாலத்தில் எடுக்கப்பட வேண்டும்.

- *உளவியல் சமூகத் திட்டங்கள்:* இவை சமூக, கலாசார அமைப்பை மீளக் கட்டியெழுப்பி முன்னேற்று கின்றன. கலைகள், கதை சொல்லுதல், சுய உதவிக்குழுக்கள், துக்கம் கொண்டாடுதல் மற்றும் மீள் ஈமக்கிரிகைச் சடங்குகள், மீள் பயிற்சி, கல்வி மற்றும் மீள் தேர்ச்சி, சமூகங்களுடனும் குடும்பங்களுடனும் தனிநபர்கள் மீளிணைந்து ஐக்கியப் படுதல், ஆலோசனையும் மற்றும் முழு ஆதரவும், தகவல் பரிமாற்றம், கூடுவதற்கான பாதுகாப்பான நிலைமையை உருவாக்குதல், வேலைப் பின்னல் அமைப்பு, அனுபவங்களைப் பங்கிடுவதும், புதிய வழிமுறைகளை உருவாக்குவதும் என்பனவாகும். திட்டங்கள் ஒரு சமூகத்திற்குள் அல்லது குழுவுக்குள் செயற்பட்டபோதும் ஆயுத மோதல்களிலிருந்து மிகவும் துரிதமான தற்காப்புப் பெறும் வகையில் அடிக்கடி குணப்படுத்தும் வழி முறை வழங்கி உதவி, பல்வேறு வித்தியாசமான பகுதியிலான மோதல் பகுதியிலிருந்து ஒருங்கே கொண்டு வர உதவ வேண்டும். எல்லா அளவிலான தலையீடுகளும் எல்லா அமைப்பு களுக்கும் பொருத்தமில்லை என்றாலும், மன அதிர்ச்சி சூழ்நிலைகளுக்கு பொதுவாக மிகவும் தாக்கமான பன்முக வழிமுறை கையாளப்பட வேண்டும். உளவியல் சமூகத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டு ள்ளன. (உ+ம்) பாதுகாப்புக்கும் நலநோன்புக்குமான நெதர்லாந்து நிறுவனம், ஒத்துழைப்புக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் 2000ம் ஆண்டுப் பிரகடனம்: மோதலின் போதும் மோதலின் பின்பும் ஏற்பட்ட நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட அகதிகள், இடம்பெயர்ந்த மற்றும் மக்களின் மனோநலம்.
- *ஆலோசனை வழங்குதல்:* உளவியல் சிகிச்சை, குழு வேலை, குடும்ப சிகிச்சை, ஆலோசனை, சமூகத்தின் ஆதரவு என்பன அதிகாரத்துவ சேவைகளினால் மட்டும் பெறப்படுவன அல்ல. இவை இலகுவான முறையில் உயிர் தப்பி வாழ்பவர்களை உள்ளடக்கி அவர்கள் பங்கு பற்றவும் பங்களிக்கவும்கூடிய (பயிற்சி பெற்ற அதிகாரியுடனோ இல்லாமலோ) ஒரு குடும்ப சூழ்நிலையில் இருக்க வேண்டும். மன அதிர்ச்சிக்கான ஆலோசனை மிகவும் தாக்கமானதாக இருத்தல் வேண்டும். ஆனால் அது பொருத்தமானதும் உகந்ததுமான வழியில் செய்யப்பட வேண்டும்.
- *உளவியல் சமூகவியலில் உள்ளூர் சமூகங்களுக்கு தேர்ச்சி உதவி யளித்தல்:* குறைந்தளவு பயிற்சி பெற்ற, உள்ளூர் மக்களுக்கு மனோ அதிர்ச்சி வைத்திய ஆலோசனைப்

பயிற்சி கொடுப்பவர்களான நலன் பேணும் அதிகாரிகள் முற்றிலும் பொருத்தமற்றவர்களாக இருக்கின்றனர். ஆனால் உள்ளூர் மக்களுக்கான பயிற்சித் திட்டங்களை உருவாக்குவதற்கும் உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் கொண்டுவரப்பட்ட பல்வேறு வழிமுறைகள், கருத்துக்களுக்கிடையிலான உள்ளார்ந்த தொடர்பு மிகவும் பயனுள்ளதாகும். பங்குபற்றுபவர்கள் தாமாகவே நடவடிக்கைகளை வகுக்கவும் அவற்றை அமுல்படுத்தவும் ஒரு தீர்க்கமான பாத்திரத்தை வகிக்க முடியும்.

- ***சுய உதவி ஆதரவுக்குழுக்கள்:*** இந்த அறிக்கை ஒரு மன உணர்ச்சி பூர்வமான அல்லது நடைமுறை பூர்வமான உதவியாகும். அங்கத்தவர்கள் ஒரு பொதுப்பிரச்சினையைப் பங்கிடுவதுடன் பரஸ்பர உதவியின் மூலம் தமது இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்கின்றனர். சாதாரணமாக குழுக்கள் அங்கத்தவரால் தலைமை தாங்கப்படுகின்றன. பல அறிக்கைகள் நேரடி ஆதரவையும் சேவைகளையும் வழங்குகின்றன (உ+ம்: ஆலோசனை மற்றும் ஆதரவு). பெரும்பாலானவை அங்கீகாரத்துக்காகத் தொடர்ந்து போராடுதல், ஏற்றுக்கொள்ளுதல், மற்றும் நீதி என்பன போன்ற பரந்த இலட்சியங்களைக் கொண்டுள்ளன. பாதிக்கப்பட்டோருக்கான சுய உதவிக் குழுக்கள் பொதுவாக அனுபவங்களைப் பரிமாறுதல், பிரச்சினைகள் மற்றும் தீர்வுகள், பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பது, மாற்றத்துக்காகப் பிரசாரம் செய்வது, தகவல் பரிவர்த்தனை என்பவற்றுக்கான கருத்தரங்குகளை நடாத்தி உதவுகின்றன.
- ***குணமாக்கலுக்கான மாதிரி வடிவங்கள்:*** மாதிரி நடவடிக்கைகள், நோக்கங்கள், சடங்குகள் என்பன மன உணர்ச்சி சம்பவங்களைக் கட்டுக்குள் கொண்டுவர உதவுவதுடன் துன்பமான வழிமுறைகளில் உள்ள குறிப்பான விடயத்திலும் சேவையாற்றுகின்றன. இவை தனிப்பட்டதாகவும் கலாசாரப் பொருத்தப்பாடானதாகவும் இருக்குமானால் அவ்வாறான மாதிரிகள் மிகவும் தாக்கமுள்ளவையாகும். அந்த வேளையில் அவை கடந்த காலப் படிப்பினைகளிலிருந்து மதிப்புள்ளவற்றை சமூகத்திற்கு நினைவுப்படுத்தி ஒரு பரந்த நன்மையைச் செய்கின்றன.
  - ஸ்தூபிகள், தொல்பொருட்சாலைகள், நடு கற்கள், சமாதானப் பூங்காக்கள், மதிப்புக்குரிய புதை குழிகள் என்பவற்றின் அடையாளங்களில் கடந்தகால நினைவுகள் நிலைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. துன்பத்திற்குள்ளானவர்களின் கருத்துக்கள், உரிமைகள், அபிலாசைகள் என்பன அவர்களுக்குப் பின் உத்தியோகபூர்வ அறிக்கைகள், இடங்கள், கட்டிடங்கள், வீதிகள் என்பவற்றுக்கு உத்தியோகபூர்மாக அவர்களது பெயர்களைச் சூட்டுதல் என்பன வற்றின் மூலம் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
  - மன்னிப்பு உண்மையாக இருக்குமாயின் அதுவும் ஒரு குறிப்பிடக் கூடிய அர்த்தத்தைக் கொண்டிருக்கும்.
  - நஷ்டஈடும், இழப்பீடு வழங்கலும் செயற்பாடுகளை, தவறை அங்கீகரித்து ஏற்றுக்கொள்வதை பிரகடனம் செய்வதுடன் கடந்த காலத்தால் ஏற்பட்ட வடுக்களை குணப்படுத்துவதில் பங்குபற்றும் தார்மீகப் பொறுப்பை பொதுமக்களுக்கு வழங்கி உயிர் தப்பியவர்களின் சுயமரியாதையை மீட்கும் பிரக்ஞையை உயர்த்தும். அத்துடன் நஷ்டஈட்டின் அடையாள நடவடிக்கைகளையும் (மீள் ஈமக்கிரிகைகள் போன்ற) மற்றும் பொருள் நடவடிக்கைகளையும் (உ+ம்: கொடுப்பனவுகள்) செய்தல்.
  - பிரத்தியேகமான ஈமக்கிரிகைகள், மற்றும் வைபவங்கள் கூட பலமான மாதிரி மற்றும் குணப்படுத்தும் பெறுமதியைக் கொண்டுள்ளன.

ஓய்வூதியம், ஒரு ஸ்துாபி, அல்லது புதைகுழியை தோண்டுதல் போன்ற நோக்கு வெளிப்பாட்டின் ஊடாக ஒரு குணமளிக்கும் வழிமுறை நடைபெறு வதில்லை. ஆனால், மீள் ஈமக்கிரிகைச் சடங்கு போன்றவற்றைச் சுற்றியதூடாகவே இவ்வழிமுறை இடம்பெறுகின்றது. குணப்படுத்தலின் மாதிரி வடிவங்கள் முற்றிலுமாக பரந்த அமைப்பிலிருந்து விலகியிருப்பதில்லை. ஏற்றுக்கொள்ளல், மன்னிப்பு, அங்கீகாரம் மற்றும் கணிசமான பொருளுதவி கூட ஒரு போதும் மரணமடைந்தவரைத் திருப்பித்தரவோ மனோரீதியாக வேதனையால் பாதிக்கப் பட்டவரின் கஷ்டத்தைக் குறைக்கவோ போவதில்லை. நஷ்டஈட்டையும் மன்னிப்புக் கோருதலையும் ஏற்றுக்கொள்வதால் தமது அன்புக்குரியவர்களுக்கு சாந்தி ஏற்படும் என உயிர் தப்பி வாழ்பவர்கள் இரு மனப்போக்கில் எண்ணுகின்றனர். மாதிரி நடவடிக்கைகள், உண்மை, நீதி மற்றும் சமூக மாற்றம் என்பனவற்றைக் கொண்டு வருபனவற்றுடன் இணைக்கப்படாவிட்டால், கடந்து போன அகால காலத்துடன் நெருங்கிய அரசாங்கத்தின் தந்திரோபாய மாகப் பார்த்து உயிர்தப்பி வாழ்வோர் அதிலிருந்து துாரவிலகி நிற்பர்.

## 7 நீதி

### *பழிக்குப் பழியான நீதி*

**பழிக்குப்பழி ஒரே நேரத்தில் வழங்குபவரின் திருப்தியையும் மற்றும் ஒருமைப்பாட்டுக்கான *நீதியையும் கொண்டிருக்கின்றது, அல்லது ஒருமைப்பாட்டுக்கும், ஜனநாயகமயப்படுத்தும் வழிமுறைக்கும் ஆபத்தானதாக இருக்கின்றது.***

கடந்தகால கோரிக்கைகளான ஏற்றுக் கொள்ளுதலும், குற்றங்களுக்கு தண்டனை வழங்குவதையும், 'நீதி செயற்படுத்து கின்றது'. ஆனால் நீதி பல கொள்கைகளை உடையது: அது பழிக்குப்பழி வாங்குவதும், குற்றம்சாட்டுதலை அடிப்படையாகக் கொண்டதும், மத்தியஸ்தத்தை அடிப்படை யாகக் கொண்டதும், உண்மையறியும் ஆணைக்குழுக்கள் சரித்திரரீதியான நீதியை உருவாக்குகின்றன. நஷ்டஈட்டுக் கொள்கைகள் இழப்பீட்டு நீதியை இலக்காகக் கொண்டுள்ளன. பழிக்குப்பழி என்பதன் பரிமாணத்தின் மீதான போக்கு முக்கியத்துவப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் இருப்பது இல்லை என்ற கருத்து வெளிவந்தபோதிலும் சில எச்சரிக்கைக் குறிப்புகளாவது அவசிய மாகும். அரசியல் யதார்த்தங்களுக்கும், தார்மீகரீதியாக செய்யப்பட வேண்டிய வைக்குமிடையிலான சமநிலை ஒரு கடினமான சவாலாகும். பழிக்குப்பழி என்பது ஒரே நேரத்தில் வழங்குபவரின் திருப்தியையும் மற்றும் ஒருமைப் பாட்டுக்கான நீதியையும் கொண்டிருக் கின்றது அல்லது ஒருமைப்பாட்டுக்கும் ஜனநாயகமயப்படுத்தும் வழிமுறைக்கும் ஆபத்தானதாக இருக்கின்றது. அரசியல், பொருளாதார சூழ்நிலையைப் பொறுத்து, மோதலுக்குப் பிந்திய தந்திரோபாயத்தைப் பொறுத்தவரை பழிக்குப்பழி நீதி என்பது லேசில் சாத்தியமானது அல்ல எனக் கருதலாம். பாதிக்கப்பட்டவர்களின் உண்மையான உணர்வுகளையும் தேவைகளையும் குற்றவாளிகள் நிராகரிப் பதையோ புறந்தள்ளுவதையோ பழிக்குப் பழியானது நீதியானது முக்கியத்துவப் படுத்திக் கவனிக்க வேண்டும். மேலதிகமாக வழக்கு விசாரணைகள் சில வேளைகளில் பகைமையை ஏற்படுத்தி மீளிணக்க வழிமுறைக்கு தடங்கல் செய்யக்கூடும்.

**பழிக்குப்பழியான நீதியின் நன்மைகள்**

- இது தனிப்பட்ட பழிவாங்குதல் நடவடிக்கைகளைக் குறைக்கின்றது (விழிப்புணர்வு, சுருக்கமான நீதி போன்றவை).
- இது குற்றவாளிகள் மீண்டும் அதிகாரத்திற்கு வருவதைத் தடுத்து கடந்தகாலம் திரும்பாது என்ற பொது நம்பிக்கையைக் கட்டியெழுப்புகின்றது.
- யார் சரி யார் பிழை என்பதை பகிரங்கமாக ஏற்றுக்கொள்வதால் இது

பாதிக்கப்பட்டவர்களுக்கு கடமையுணர்ச்சியை ஏற்படுத்தி, அவர்களது காயங்களை ஆற்றி, அவர்களுடைய சுய நம்பிக்கையை மீட்டெடுக்கிறது.

- இது குற்றவாளிகளை தனிமைப் படுத்துகிறது. குற்றவியல் நீதிமன்றங்கள் தனிப்பட பொறுப்புச் சொல்லும் நிலையை உருவாக்குவதால், முழுச் சமூகமும் பொறுப்பு என்ற ஆபத்தான எண்ணத்திலிருந்து நிர்மூலமாக்கப் படுகிறது.
- இது சட்டத்தையும் ஜனநாயக வழிமுறைகளையும் பலப்படுத்துவதுடன் அரசியல் மறு மலர்ச்சிக்கும் நீதிநெறிமுறைகளுக்கும் வழி சமைக்கின்றது. இது ஜனநாயக விழுமியங்களை பலப்படுத்துவதுடன், புதிய ஆட்சி அவற்றை அமுலாக்குவதில் உள்ள ஆற்றலில் பொதுமக்களின் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.
- இது தீமையின் தொடர்ச்சியை உடைத்து எதிர்காலத்தில் மனித உரிமைகள் துஷ்பிரயோகம் செய்யப் படுவதை நிறுத்துகின்றது.

**பழிக்குப்பழி நீதியின் கஷ்டங்களும் எல்லைகளும்.**

- *முன்னுரிமைகள்.* மோதலுக்குப் பிந்திய அரசியல், கலாசார, சரித்திர சக்திகளின் குறிப்பான இணைப்பின் போது சில வேளைகளில் வழக்கு விசாரணைகள் மூலம் நீதியைக் காண்பதைவிட ஏனைய தேவைகள் அவசர மானவையாக இருக்கும்.
- *பலவீனமான ஒரு சமாதானத் தீர்வு ஸ்திரமற்றதாகிவிடல்.* குற்றச்சாட்டுப் பயமுறுத்தல் முன்னாள் இராணுவத் தலைவர்களை புதுப்பிக்கப்பட்ட சதி அல்லது ஒரு கிளர்ச்சிக்குப் பொறுப்பாக்கி விடக்கூடும்.
- *விரோதப்பாங்கான துணைக் கலாசாரங்களையும், வலைப்பின்னலையும் தூண்டிவிடும்.* குற்றவியல் நீதிமன்றத் தீர்மானங்கள் ஜனநாயகத்திற்கு விரோதமான வலைப்பின்னல்களையும், ஸ்திரமற்ற நிலையையும் உருவாக்கி துணைக் கலாசாரங்களையும் தூண்டி வளர்த்து ஜனநாயகத்தை ஸ்திரமாக்குவதற்கு இடையூறு விளைவிக்கும்.
- *ஆட்சி செய்தலை முடமாக்கிவிடும்.* நிர்வாக, முகாமைத்துவ உத்தியோகத்தர்களின் தூர நோக்குடைய, தூய்மையான ஆட்சி முறையை முடமாக்கி பாதிப்புக்குள்ளாக்குவதுடன் அரசியல் மற்றும் பொருளாதாரம் என்பவற்றின் அடிப்படையான வளர்ச்சிக்கும் ஆபத்து விளைவிக்கும்.

***பழிக்குப்பழி நீதிக்கு பொருள்ரீதியான தடைகள்***

- *சாட்சியங்களை சேதமாக்கிவிடும்.* குற்றங்களை நிரூபிப்பதற்கான பற்றாக் குறையால் நன்கு வெளிப்படையாகத் தெரிந்த குற்றவாளிகள் குற்றத்தினின்று தப்பி விடுவதோடு முழு அமைப்பின் மீதுமான பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையைப் பாதித்துவிடும்.
- *குற்றவியல் நீதிமுறைமையானது வெளிக் கொணர்வதற்கு லாயக் கற்றது.* நீதியின்மையின் மூலக் காரணத்தில் ஒன்றாக நீதித்துறை இருப்பதோடு, பெருமைக்குரிய அமைப்பும் மோசமாக பாதிப்புக் குள்ளாகும். காத்திரமற்ற நீதியை விட மேலும் சேதமாக்குவதற்கு எதுவும் இல்லை.
- *குற்றவியல் குற்றச்சாட்டுகள் மீளிணக்க வழிமுறைகளை தடை செய்கின்றன அல்லது பின் தள்ளுகின்றன.* குற்றவாளிகளை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதில்லை என தலைவர்கள் முடிவு செய்தால், அப்பொழுது அது மீளிணக்க முயற்சிகளை ஆபத்திற்கு உள்ளாக்கும் என அஞ்சுவதற்கு இடமுண்டு. இதற்கு அங்கு பல்வேறு காரணங்கள் உண்டு. ஏனென்றால், முதலாவதாக ஆதார முடிவுகள் அல்லது நிலவுகின்ற சமூக சூழ்நிலைகளால் அளவிலும், நீதியிலும் தாக்கமான ஆட்சியை உருவாக்கும் ஆற்றலைப் பெற முடியாது போகலாம். இரண்டாவதாக மோதலுக்குப் பிந்திய பழிக்குப் பழி நீதியானது அவசியப்படும்

போது அடிக்கடி ஆளும் சட்ட விதிமுறைகள், மனித உரிமைகள் என்பவற்றில் ஆதிக்கம் செலுத்தி 'வெற்றியாளர்கள் நீதி' என்ற கஷ்ட மான நிலையை ஏற்படுத்தி பழைய தனிப்பட்ட, அரசியல் பரம்பரைப் பகைமையைத் தீர்த்துக்கொள்ளும். மூன்றாவதாக, மோதலுக்குப் பிந்திய நீதி அமைப்பு முறையானது பெரும் தொகையான குற்றங்களைக் கையா ளக்கூடிய ஆதாரங்களை நன்கு கொண்டிருக்காததுடன் அது ஒரு சிறிய வீதத்தினர் மீதே குற்றச்சாட்டுகளை அல்லது தண்டனையை வழங்குகிறது. எனவே அது தன்னிச்சையான வழி முறையை உண்டாக்குகிறது.

- *வழக்கு விசாரணைகள் தனிப்பட்ட குற்றங்களை அடையாளப்படுத்து கின்றன.* அத்துடன் பயங்கரவாதத் திற்கும் வன்செயலுக்கும் பரந்த முறைகளில் பன்முகத்தன்மையான முறையிலும் நடைமுறையிலும் பங்களிப்புச் செய்யப்பட்டதை அது கொண்டு வரவில்லை. மேலும் சொல்வதானால் விசாரணைகள் குற்றவியல் குற்றங்களை ஏற்றுக்கொள் கிறதேயொழிய அரசியல் தார்மீகப் பொறுப்பையல்ல.

## *சர்வதேச நீதிமன்றங்கள்*

***மனித உரிமை மீறல்களில் நேரடியாக ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதில் உடன்பாடொன்று காண்பது கடமையாகும். தேவையானால் நாட்டு க்கு வெளியே செயற்படுகின்ற நீதிமன் றங்கள் எங்கு இந்த குற்றங்கள் இழைக்கப்படுகின்றனவோ அதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.***

சர்வதேச நியாயாதிக்க கோட்பாட்டு வாதத்தின்படி, நேரடியாக மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோர் மீது, தேவை யேற்படின் நாட்டுக்கு வெளியே செயற்படும் நீதிமன்றங்களும், அக்குற்றம் எங்கு இழைக்கப்பட்டாலும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். சர்வதேச சட்டநீதி பல வடிவங்களை எடுக்க முடியும்.

- ***குறிப்பிட்ட காரியத்திற்காக அமைக்கப்பட்ட நீதிமன்றங்கள்.*** ஐ.நா.பாதுகாப்புச் சபை, இரண்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றங் களை ஸ்தாபித்துள்ளது. 1993ல் உருவாக்கப்பட்ட முன்னாள் யூகோஸ்சிலோவாக்கியாவுக்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICTY), மற்றையது 1994இன் றுவாண்டாவுக்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICTR).
- ***கலப்புரீதியான தேசிய- சர்வதேசிய குற்றவியல் நீதிமன்ற ங்களின் தோற்றமானது*** சர்வதேச சட்ட நீதித்துறையில் ஒரு புதிய வெளிப்பாடாகும். உதாரணத்திற்கு சியாராலியோனில் அந்நாட்டினதும், சர்வதேச சட்டங்களினதும் சேர்க்கை யான சட்டங்களும் நீதிபதிகளும் கொண்ட நீதிமன்றங்களை அந்நாடு கொண்டுள்ளது.
- நூரன்பேர்க் மற்றும் டோக்கியோ யுத்தக் குற்ற நீதிமன்றங்கள் மற்றும் ICTY மற்றும் ICTR போல, நிரந்தரமான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை (ICC) ஸ்தாபிப்பது, தற்காலிக பொறி அமைப்புக்குப் பதிலாக தாக்கமான முறையில் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் இழைத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

சர்வதேச நீதிமன்றங்கள் அல்லது தேசிய விசாரணைகள் என்பன சர்வவியாபக நியாயாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதன் பலனாக உள்ளூர் விசாரணைகளுக்கு அது ஒரு சீரான பூர்த்தியாக அல்லது மாறாகக் கூட காணப்படுகின்றது. அவை, பயமுறுத்திச் சம்மதிக்கச் செய்தல், பொருள்ரீதியான தடைகள், செயல்முறை தரங்களை மீறுதல், பயிற்சியளிக்கப்பட்ட நபர்களின் பற்றாக்குறை மற்றும் 'விருந்தினர் நீதி' மீதான குற்றச்சாட்டுகள் என்பவற்றை கணிச மானளவு குறைக்கும். ஆனால் ICTY மற்றும் ICTR என்பவற்றின் உண்மையான அனுபவ கருத்துகளின்படி அவை கூட

பல்வேறு காரணிகளினால் கட்டுப்படுத்தப் படுகின்றன:

- *அமுலாக்கம் செய்வதற்கான பொறி முறைப் பற்றாக்குறை* பொது மக்களின் நம்பிக்கையை பெரிதும் பாதித்துள்ளது. நீதிமன்றங்கள் கைது செய்வதற்கான பிடியாணையைப் பிறப்பித்தாலும் பொலிஸ் அதிகாரிகள் குற்றம்சாட்டப்பட்டவரை கைது செய்வதில்லை.
- அவை விரோத செயற்பாடுகள் முற்றாக நிறுத்தப்படுவதற்கு முன்னர் தமது வேலையை ஆரம்பித்திருந்தாலும் *நீதிமன்றங்கள் தாமாகவே மோதல் போக்கை நிறுத்துவதில்லை.*
- *உள்நாட்டு அல்லது சர்வதேச மோதலின் தன்மையிலேயே குற்றச்சாட்டின் வீச்சு தங்கியுள்ளது.* ஜெனீவா உடன்படிக்கையின் கீழ் ஒரு மோதல் உள்நாட்டிலானதாக இருந்தால், குற்றவாளி இனப்படு கொலை மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்காகவே வழக்குத் தொடர முடியும். ஆனால், மனிதாபிமான சட்டம் அல்லது மற்றும் யுத்தக் குற்றங்கள் பற்றிய ஜெனீவா சாசனத்தினை கெடுதலான முறையில் உடைத்துப் பாவிக்க முடியாது. (இருந்த போதிலும் ICC இந்த மட்டுப் படுத்தலால் தடங்கல்படாது)
- *கவர்ச்சிகரமான பழிக்குப்பழி வாங்கும் நீதியின் அபாயம் என்னவெனில் மனித உரிமைக் குற்றங்களுக்கான சர்வவியாபகப் பிரதிபலிப்பாகும்.* சர்வதேச நியாயா திக்கத்திற்கு ஆதரவு தேடும்போது சர்வதேச நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பழிக்குப்பழி நீதிக்கு முழுமையாக அழுத்தம் கொடுக்க வேண்டும். ஏககாலத்தில் இது நடைபெறும் போது, முரண்பாடு இருப்பினும் குறிப்பாக வளர்முக நாடுகளில் பழிக்குப்பழி நீதிக்கான சம்பிரதாயமற்ற மற்றும் மத்தியஸ்துவ அடிப்படையிலான பொறிமுறைக்கு ஆதரவு வளரும்.
- *குறிப்பிட்ட விடயங்களுக்கு மாத்திரமான நீதிமன்றங்கள் செலவானவையும், நேரத்தை எடுப்பவையும், மக்களிடமிருந்து தூரவிலகியிருப்பவையுமாகும்.* சர்வதேச தேசிய உறுப்புகளைக் கொண்ட கலவை நீதிமன்றங்களும் ICCயும் இப் பிரச்சினைகள் சிலவற்றை நீக்கக்கூடும்.

## பழிக்குப்பழி நீதிக்கான மாற்றீடு

மோதலுக்குப் பிந்திய நீதி முறைமை யிலிருந்து முற்றிலுமாக பழிக்குப்பழி நீதியின் எந்த வடிவத்தையும் விலக்கி வைப்பதென்பது மிகவும் அரிதானது.

இருந்தபோதிலும் ஒரு பாதையில் செல்வதற்கு பழிக்குப்பழி நீதிக்கு ஆபத்து அல்லது கஷ்டம் இருக்குமாயின் அப்பொழுது அதற்கு வேறு பல்வேறு மாற்றீடுகள் அல்லது மேலதிக வழிகள் இருக்கின்றன. முதலாவது தூய்மை செய்தல், இரண்டாவது பொது மன்னிப்பு, மூன்றாவது குணமாக்கும் நீதியைப் பிரயோகித்தல், உண்மையறியும் ஆணைக் குழுவை ஸ்தாபித்தல் நஷ்டஈட்டுத் திட்டங்களை ஸ்தாபித்தல் - கடைசி இரண்டும் சம்பிரதாய தண்டனையில்லாத நீதி வடிவங்களைக் கொண்டுள்ளன. உண்மை அறியும் ஆணைக்குழுக்கள் மற்றும் நஷ்டஈடு விடயங்கள் 8 மற்றும் 9ம் பிரிவுகளில் எடுக்கப்பட்டுள்ளதால் இங்கு முதல் மூன்று மாற்றீடுகள் பற்றிக் கவனம் செலுத்தப்படுகின்றது.

### தூய்மை செய்தல்

ஆக்கிரமிப்புக்கும் அடக்குமுறைக்கும் பொறுப்பான முன்னைய அரசின் பிரதிநிதிகளின் தகுதியின்மை அவர் களைத் தண்டிக்கிறது. இந்த வகையான நியாயாதிக்கமற்ற ஒழுக்காற்று நடவடிக்கை கள் பல்வேறு வடிவங்களில் வருகின்றன: அரசியல் தகுதியீனம், வாக்குரிமை இழத்தல், பொலிஸ், இராணுவம், அரச சேவை போன்ற பொதுச் சேவையிலிருந்து விலக்கி வைத்தல், மற்றும் காலத்துக்கு முந்திய ஓய்வூதியம் பெறவைத்தல்,

இடமாற்றம் அல்லது முக்கியத்துவமற்ற பதவிக்கு மாற்றுதல் போன்ற மென்மையான வழிமுறைகள்.

**பொது மன்னிப்பு**

தீங்கு செய்யும் கெடுதியான வட்டத்தினர் இல்லாமல் செய்யப்படாவிட்டால் மீளிணக்கமானது அடிப்படையில் கெடுதலுக்குள்ளாகும். பாதுகாப்பளிக்கப்பட்டவர் தீமையின் உருவமாற்றமாகும். இது அரச தலைவர்கள் மீது குற்றச்சாட்டுகள் செலுத்துவதற்கு எதிராக பாதுகாப்பளிப்பதற்கு ஏதுவாக சர்வதேச வழக்க நடைமுறையாக பதித்து வைக்கப்பட்டுள்ளது. சில விடயங்களில் சமாதானத்தை உண்மையில் உருவாக்குவதற்கு ஏதுவாக தற்காலிகமாகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலும் உள்ளூர் சட்டங்களுக்கூடாக கிளர்ச்சி இயக்கங்களின் தலைவர்களுக்கு வழங்கப்படுகின்றது. தீங்கின் மிகவும் வழக்கமான உற்பத்தி ஸ்தானம் பொது மன்னிப்புச் சட்டமே.

பொது மன்னிப்பு பல வடிவங்களில் வரலாம். ஆனால் இது எல்லா வகையிலும் எப்பொழுதும் மறைந்து கிடக்கும் பல விரோதங்களையும், பலமான சந்தேகத்தையும் கொண்டதோடு முழு மீளிணக்க வழிமுறை மீதும் மக்களின் நம்பிக்கையின்மையை நீக்கி உற்சாகமூட்டுதலுடனும் தொடர்புள்ள வலுவான கஷ்டமான விருப்பமாகும். மோதலுக்குப் பிந்திய சமூகங்களின் அமைப்பில் இது ஒரு சர்ச்சைக்குரிய கருவியாகும். வழமையாக இது மீளிணக்க வழிமுறையைத் தடங்கல் செய்கிறது. ஒருதலைப்பட்சமான மன்னிப்பைப் பொறுத்த வரை அதன் நோக்கம் விலக்கப்படுகின்றது. எப்படியிருந்த போதிலும் வன்செயல் மோதல் முடிவுற்றால் அன்றி மற்றும்படி இது ஏதுவானதல்ல. பொது மன்னிப்பு என்பது இறுதியாக நாடவேண்டியதாகும். அப்பொழுது கூட இறுக்கமான கட்டுப்பாடுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். இவற்றை உள்ளடக்குவதானால், பொது மன்னிப்புச்சட்டத்தை சட்டமாக்குவது பற்றி மற்றவர்கள் மத்தியில் ஒரு பொது விவாதத்தை நடாத்த வேண்டும். சாத்தியமானளவு உண்மை அறிதலையும் நஷ்டஈட்டையும் மேற்கொள்ள வேண்டும். எந்த ஒரு மனித உரிமை உடன்படிக்கையையும் மதித்து நடக்க வேண்டியது அரசின் சர்வதேசக் கடப்பாடாகும்.

**ஆரோக்கிய நீதி**

***ஆரோக்கிய நீதி***
***பாதிக்கப்பட்டவர்களின் பூரண பங்குபற்றுதலுடன் செயல்படுவதுடன், சம்பந்தப்பட்டவர்களுக்கிடையிலான உறவுகளையும் மீட்டெடுக்கிறது.***

தனியே தண்டனை அளிக்கும் நோக்கத்துடன் குற்றங்களை கையாள்வதால் அதிருப்தி வளர்ந்து, பழிக்குப் பழிக்கு பதிலாக சேவையாற்றக்கூடிய பொறிமுறைகளையும், மாற்றீடுகளையும் கூட தேட வேண்டி ஏற்படுகின்றது.

ஆரோக்கிய நீதி தவறான விடயங்களை வித்தியாசமாகக் கையாள்கின்றது. இது பாதிக்கப்பட்டவர்களின் பூரண பங்களிப்பு மூலம் செயற்படுவதுடன், சம்பந்தப்பட்ட சமூகங்கள் விடயங் களை விவாதித்து, தவறாகக் கையாளப்பட்டவற்றை அடையாளம் கண்டு ஆதரவை வரையறுக்கின்றது. குறைந்தபட்சம் மீளிணக்கக் கொள்கையின் பரந்த இலட்சியங்கள் கோட்பாட்டில் எதிரொலிப்பதை இலக்காகக் கொண்டு இலேசாக குற்றவாளியைத் தண்டிப்பதை விட மிகவும் பரந்த இலட்சியத்துடன் எவ்வளவு விரைவில் சாத்தியமோ அவ்வளவு விரைவாக குற்றவாளிகளுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இடையிலும் அவர்களுடைய சமூகங்களுக்குமிடையிலும் உறவுகளை மீட்டெடுப்பதே இறுதியான நோக்கமாகும்.

நீதியின் பாரம்பரிய வடிவங்கள் கடந்த கால மனித உரிமை மீறல்களை மிகவும் சம்பிரதாயபூர்வமான தண்டனை வழிகளில் கையாள்வதற்கான மாற்றாகவும் அதைப் பூர்த்தி செய்வதாகவும் இருக்கின்றன. இந்தப் பாரம்பரிய பொறிமுறைகள் சில குறிப்பிடக்கூடிய பலவீனமான அம்சங்களைக் கொண்டுள்ளன. அதன்

விளைவாக நீதியான விசாரணையின் மறுப்புக்கு பல உதாரணங்களும் உண்டு. திருட்டு போன்ற சிறு தொகையான சிறிய தவறான செய்கைகளைக் கையாளும் பொருட்டே உண்மையில் இவை உருவாக்கப்பட்டன. அவற்றால் மிகவும் பாரதூரமானதும் பரந்த அளவிலுமான குற்றச்செயல்களின் பாரத்தைத் தாங்க முடியுமா? மோதலுக்குப் பிந்திய சூழ்நிலைகளில் ஆரோக்கியமான நீதி என்பதை நடைமுறைப்படுத்திய சில அனுபவங்களே உள்ளன. 1994 இனப்படு கொலையின் குற்றவாளிச் சந்தேக நபர்களின் மீதான தண்டனையை விரைவுபடுத்தவும், பொது மக்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யவும், மத்தியஸ்த ஆதார சக்திகளை அறிமுகப்படுத்தவும் மற்றும் மீளிணக்கத்தை முன்னேற்றவும் றுவாண்டாவிலிருந்த 'ககா' (gacaca) நீதிமன்றங்களை மாற்றி யமைத்ததை பெரிதாகக் குறிப்பிடலாம். ஆரோக்கியமான நீதிப் பொறிமுறை எடுப்பான அம்சங்களையும், பலத்தையும் மற்றும் பலவீனங்களையும் கொண்டுள்ளது.

### *எடுப்பான அம்சங்கள்*

- முழுச் சமூகத்தினதும் அல்லது குழுவினதும் பிரச்சினை கணிப்பில் எடுக்கப்படும்.
- மீளிணக்கம் மற்றும் சமூகத் தீங்கிலிருந்து மீளல் என்பவற்றுக்கு அழுத்தம் கொடுக்கப்படும்.
- பாரம்பரிய மத்தியஸ்தர்கள் தகுதி அல்லது குல அடிப்படையில் சமூகத்திற்குள்ளிருந்தே நியமிக்கப் படுவர்.
- பொதுமக்களின் பங்குபற்றல் உயர்ந்த அளவினதாய் இருக்கும்.
- ஒரே சமரசத்தை அடைவதில் வழமை யான சட்டம் மாத்திரமே கவனத்திற்கு எடுக்கப்படும் ஒரு அம்சமாகும்.
- சான்றாதார மற்றும் நடைமுறைகளின் விதிகள் இணக்கப்பாடானவையாகும்.
- உத்தியோக தோரணையான சட்டப் பிரதிநிதித்துவம் இருக்காது.
- தீர்மானங்கள் இணக்கத்தின் அடிப்படை யிலும், செயல்முறை மனமுவந்த தாகவும் இருக்கும்.
- நீதியான தண்டனைகள் மீதே அழுத்தம் இருக்கும்.
- தீர்மானங்களின் அமுலாக்கம் பயமற்ற சமூக அழுத்தத்தினூடாவே இருக்கும்.
- தீர்மானங்கள் மதச் சம்பிரதாயங்களுக் கூடாக உறுதிப்படுத்தப்பட்டு மீள் ஒருமைப்பாட்டை இலக்காகக் கொண்டிருக்கும்.

### *பலங்கள்*

- உள்ளூர் மக்களை (மற்றும் நாட்டுப்புற) அணுகக்கூடியதாக இருக்கும், உள்ளூர் மொழியைப் பயன்படுத்தலாம், நடைதூர இடைவெளியே இருக்கும், எளிமையான நடைமுறைகளும் மற்றும் சிறிய தாமதங்களும் இருக்கும்.
- தங்களது அயலவர்களுடன் கூட்டு றவை தொடர்வதில் தங்கி நிற்கின்ற ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து வாழ்கின்ற சமூகங்களைச் சேர்ந்த மக்கள் மீளிணக்கம், நஷ்டஈடு, மீட்சி மற்றும் புனர்நிர்மாணம் என்பவற்றின் அடிப்படையிலான வகையான மிகவும் பொருத்தமான நீதியையே வேண்டு கின்றனர்.
- மோதலுக்கு ஒரு இறுதித் தீர்வு காணும் வகையில் சமூகமும், குற்ற வாளியும், அதிகமாகப் பங்கெடுத்து பாதிக்கப்பட்டவருக்கு வழங்கல் செய்து உண்மையான குரல் கொடுக்கின்றனர்.
- தங்களை உடைவுகளுக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகள் குறித்தும் எவ்வாறு மோதலைச் சமாதானமாக தீர்த்துக்கொள்வது என்பதை உறுதி செய்யும் பொருட்டுமாக பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் பற்றி அவை சமூகத்தின் எல்லா உறுப்பினர் களுக்கும் கற்பிக்கின்றன.
- அவை காவலர் அற்ற தண்டனைகள் மூலம் சிறைகளில் ஆள் நெருக்கடி யைக் குறைக்கின்றன. சிறைச்சாலை நிதி ஒதுக்கீடுகளை சமூக அபிவிருத்தி நோக்கங்களுக்கு திருப்பிவிடுவதை அனுமதிக்கின்றன. குற்றவாளி பொருளாதாரத்துக்குப் பங்களிப் பதையும் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு

வழங்குவதையும் அனுமதிக்கின்றன. அத்துடன் சிறைக் கைதிகளை தமது குடும்பங்களுடன் மீளிணைக்கின்றன.

*பலவீனங்கள்*

- அடையப்படும் சமரசமானது, சம்பந்தப் பட்ட கட்சியினரின் சமத்துவமற்ற பேரம்பேசும் பலத்தைப் பிரதிபலிக்கும். பால், வயது, அந்தஸ்து என்பவற்றின் அடிப்படையில் நிலவுகின்ற சமூக நோக்குகள் சமத்துவமின்மையை ஊக்குவிக்கின்ற காரணிகளாகும்.
- வழி நடத்துபவரின் மனச்சார்பு குறிப்பிட்ட குழுக்களுக்கு சார்பாக அமைதல்.
- நடைமுறை இணக்கம், நடைமுறை பாதுகாப்புகள் என்பவையின் போதாமை.

## 8 உண்மை கூறுதல்

*உண்மை ஆணைக்குழுக்கள் கடந்த காலத்துடனான ஒரு சம்பிரதாயபூர்வமான முறிவின் சமிக்ஞையாகவும், மிகவும் வெளிப்படையான, சமாதானமான மற்றும் ஜனநாய எதிர்காலத்துக்கான மாற்றமுமாகும்.*

தனிநபர் மீளிணக்கத்திற்கும், தேசிய அல்லது அரசியல் மீளிணக்கத்திற்கும் இடையில் உண்மை ஆணைக்குழு வேலை அமைப்பானது அநேகமாக மிகவும் முக்கியமான ஸ்தானத்தை வகிக்கின்றது. உண்மை ஆணைக்குழுக்கள் பின்னைய தற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அதே வேளையில், அவை பின்னையதற்கு மறைமுகமாக உதவுகின்றன. மீளிணக்கச் செயற்பாட்டு விடயங்களில் உண்மை என்பது ஒன்று மட்டுமே என்ற போதிலும் அது ஜீவாதாரமான ஒன்றாகும்.

### *உண்மையைக் கண்டறிவதற்கான கருவிகள்*

மாறிச்செல்லும் சமூகங்கள் இன்று உண்மை ஆணைக்குழுக்களை ஸ்தாபிப் பதைப் பற்றி குறிப்பானளவு கவனத்தில் எடுக்கின்றன. இருந்த போதிலும் உண்மை ஆணைக்குழுக்கள் நீதி விசாரணை களுக்கான மாற்றீடு அல்ல. அவை நீதித் துறையல்லாத உறுப்புகளாகவுள்ளதுடன் நீதிமன்றங்களை விடவும் குறைந்த அதிகாரங்களைக் கொண்டுள்ளன. மனித உரிமை மீறல்களில் உண்மைகளைக் கண்டறிவதில் குறைந்தபட்சம் மூன்று வெவ்வேறு வகையான முறைகள் உள்ளன. அத்துடன் எந்த அல்லது எவை என்பது மிகவும் பொருத்தமான அமைப்பில் தங்கி நிற்பதைப் பொறுத்ததே. சில நாடுகளில் அரசாங்கங்கள் சரித்திரரீதியான ஆணைக்குழுக்களை அமைத்துக் கொண்டுள்ளன. இவை பல வருடங் களுக்கு முன்னர் நடந்து முடிந்துவிட்ட அரச துஷ்பிரயோகங்கள் பற்றி இன்றைய தின விசாரணைகளுக்கானவை. அரசியல் மாற்றத்துடன் ஒரு பகுதியாக இது ஸ்தாபிக்கப்படவில்லை என்பதுடன், குறைந்தபட்சம் இன்றைய அரசியல் தலைமை அல்லது நடைமுறைகளுடன் சம்பந்தப்பட்டதாகவும் இல்லை. கடந்தகால மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான உத்தியோகபூர்வ அல்லது அரை உத்தியோகபூர்வ விசாரணைகள் உண்மை ஆணைக்குழுக்களின் பிரதான தன்மை களைப் பங்கிடுகின்றன. ஆனால் அரசியல் வழிமுறையின் சுதந்திரத்தன்மை குறைவாக அல்லது எதிர்பார்ப்பு அல்லது அதிகாரத்தில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட தாக அல்லது முழு அளவில் முயற்சி க்கின்ற உண்மை ஆணைக்குழுவின் முன்னோடியாக மட்டும் இருப்பதை பொறுப்பெடுப்பவையாக இருக்கின்றன. அத்துடன் முன்னைய ஆட்சியினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட வகைகள், அத்துமீறல்கள் அறிக்கையிடப்பட்டு பல அரச சார்பற்ற திட்டங்களுடன் தங்கி இருக்கின்றன. இந்தத் திட்டங்கள் வழமையாக தேசிய மனித உரிமை ஸ்தாபனங்களாலும் சில சமயம் தேவாலயப் பின்னணியினாலும் எடுக்கப்படு வதுடன், சில வேளைகளில் குறிப்பிடக் கூடிய விளைவுகளையும் கொடுக்கின்றன.

### *உண்மை ஆணைக்குழு என்றால் என்ன?*

**பொதுவாக உண்மை ஆணைக்குழுக்களானவை:**

- இவை வழமையாக ஒன்றில் இருந்து இரண்டு வருடங்கள் வரையான காலத்திற்குச் செயற்படும் உறுப்புகளாகும்.
- இவை ஒரு சமாதான உடன் படிக்கையின் மூலம் அரசினால் அல்லது சில விடயங்களில் ஆயுதம் தாங்கிய எதிரணியினரால் உத்தியோகபூர்வமாக அங்கீகாரமளிக்கப்பட்ட, அதிகாரமுள்ள அல்லது அதிகாரம் வழங்கப்பட்டவையாகும்.
- நீதித்துறையற்ற உறுப்புகள் என்ற வகையில் உரிமையுள்ள சுதந்திர நடவடிக்கையை அனுபவிக்கின்றன.
- வழமையாக யுத்தத்திலிருந்து சமாதானத்துக்கு அல்லது எதேச்சாதிகார ஆட்சியிலிருந்து ஜனநாயகத்துக்கான அரசியல் மாற்றத்துக்காக உருவாக்குபவையாகும்.
- கடந்த காலத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுதல்.
- ஒரு தனிப்பட்ட சம்பவத்தை அல்லாது ஒரு குறிப்பிட்ட காலத்தில் இழைக்கப்பட்ட குறிப்பான அத்துமீறல்களையும் துஷ்பிரயோக மாதிரிகளையும் விசாரித்தறிதல்.
- முடிவுகள் மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கியதாக தமது இறுதி அறிக்கையைச் சமர்ப்பிப்பதன் மூலம் தமது வேலையைப் பூர்த்தி செய்தல், மற்றும்
- மனித உரிமை மீறல்களையும் சில வேளைகளில் மனிதாபிமான வழிமுறைகளையும் எடுத்துக் காட்டுதல்.

**உள்ளூரவுள்ள நன்மைகள்**

உண்மை ஆணைக்குழுக்கள் பல நன்மைகளை வழங்குகின்றன.

- ***கடந்த காலம் பற்றிய உண்மையை உருவாக்க உதவுதல்.*** கடந்த காலத்தின் வன்செயலை அழுத்தும் வகையிலும், அதன் உண்மையான அளவின் மீது பொதுமக்களின் பிரக்ஞையை உயர்த்தும் வகையிலும் ஏனைய ஒரு பக்கச் சார்பான விடயங்களை மறுதலிக்கும் வகையிலும் சரியான, விபரமான, நடுநிலைமையான மற்றும் உத்தியோகபூர்வமான பதிவேட்டை உருவாக்க இயலும்.
- ***மனித உரிமை மீறல்களில் குற்றவாளிகளின் பொறுப்புணர்வை மேம்படுத்த முடியும்.*** சான்றுகளைச் சேகரித்தல், ஒழுங்கமைத்தல், மற்றும் பாதுகாத்தல் என்பவற்றால் குற்றவியல் வழக்குத்தொடுநர்களின் வேலைக்கு அவர்கள் பங்களிப்புச் செய்ய முடியும். அவர்கள் பொறுப்பேற்றலில் காவலற்ற வடிவங்களை சிபார்சு செய்யலாம். சிவில் பொறுப்பு, காரியாலயத்திலிருந்து அகற்றுதல், பறிக்கப்பட்ட உரிமையை மீள வழங்குதல், மற்றும் சமூக சேவைத் திட்டங்கள்.
- ***பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு பகிரங்க மேடையை வழங்குதல்.*** அவர்கள் மாற்று வழி முறையின் முற்பகுதியில் பாதிக்கப்பட்டவர்களை இட்டு அவர்களுக்கு நிவாரணமளித்து உதவலாம், அவர்களுடைய இலட்சியத்துக்கு உதவலாம், தனிப்பட்ட நியாயத்தை நிரூபிக்க உணர்வூட்டலாம், அத்துடன் கடந்த கால குற்றங்களின் தனிமனித அழுத்தம் பற்றி பொதுமக்களுக்குப் போதனையூட்டலாம்.
- ***பகிரங்க விவாதத்துக்கு அறிவித்தலும் மாற்றத்தை ஏற்படுத்துதலும்.*** ஒரு மாற்று வழிமுறைக்குரிய தார்மீக, அரசியல், மற்றும் சட்டத் துறைகளில் பொதுமக்களின் வாதப்பிரதிவாதங்களை ஊக்கப்படுத்தி அவர்கள் உதவலாம்.

- *பாதிப்புக்குள்ளானவருக்கான நஷ்டஈட்டுக்கு பரிந்துரைத்தல்.* கடந்த கால துஷ்பிரயோகங்களுக்காகவும் தற்போதய மனோ ரீதியான, பௌதீகரீதியான மற்றும் பொருளாதாரரீதியான காயங்களுக்கும் நஷ்டஈடு வழங்குவதை மேம்படுத்துவதையும் மேற்படி பாதிப்புக்குள்ளானவர்களின் பகைகளை நியாயமான, தீர்க்கமான வகையில் வரையறுப்பதிலும் அவர்கள் செயலாற்ற முடியும்.
- *அவசியமான சட்ட மற்றும் நிறுவன சீர்திருத்தங்களைப் பரிந்துரைத்தல்.* அவர்கள் மனித உரிமைகளை பாதுகாப்பதில் ஏற்பட்ட தோல்விகளுக்கான தெளிவான சான்றுகளையும், சட்ட மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களுக்கான பரிந்துரைகளையும் வழங்க முடியும்.
- *மீளிணக்கத்தை மேம்படுத்தல்.* மோதலில் சம்பந்தப்பட்ட கட்சிகள், பரஸ்பரம், ஒருவர் மற்றவருடைய துன்பங்களையும் பாதிப்புகளை யும் பொறுமையாக செவிமடுத்து, புரிந்து கொள்வதை மேம்படுத்தமுடியும். மத்தியஸ்த்துக்கும், துயரங்களின் தீர்வுக்குமான பாதுகாப்பான, பாரபட்சமற்ற ஒரு அரங்கை அவர்கள் ஏற்படுத்த முடியும். குற்றவாளிகளை சமூகத்தில் மீளிணைப்பதற்கான நடவடிக்கைகளுக்கு அவர்கள் பரிந்துரைகளை வழங்க முடியும்.
- *ஒரு ஜனநாயக மாற்றத்தை ஒருமைப்படுத்த உதவுதல்.* மேலே கூறப்பட்டவை எல்லாவற்றினதும் அர்த்தம், ஜனநாயக வழிமுறைகளுக்கு வெளியே தமது நோக்கங்களை முன்னெடுக்க விரைபவர்களை பலவீனப்படுத்தி மாற்றத்தை மேலும் பரந்தளவான தாக்கி கடந்த காலத்துடனான உடைவின் ஆரம்பத்துக்கான சமிக்ஞைகளாகும்.

**எல்லா வேளைகளிலும் உண்மை ஆணைக் குழுக்களை ஏன் பயன்படுத்த முடியாது என்பதற்கான காரணங்கள்.**

- *நடந்து கொண்டிருக்கும் அல்லது புதுப்பிக்கப்படக்கூடிய யுத்த வன்செயலின் பயம்.* வன்செயல் அதிகரிக்கலாம் அல்லது யுத்தம் மீண்டும் ஏற்படலாம், பழைய குற்றங்களும் காயங்களும் மீளவும் வரலாம் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.
- *நடந்துகொண்டிருக்கும் மோதல்,* ஆயுத மோதலின் கடுமையால் நடு நிலைமையை அடைவதென்பது உண்மையில் சாத்தியமற்று இருப்பது டன் பாதிக்கப்பட்டவரும் மற்றும் கட்சிகளும் பங்குபற்றுவதும் மற்றும் பாதுகாப்பு அல்லது நம்பத்தகுந்த மற்றும் சமமாகவும் எல்லோரும் பங்குபற்றும் வழிவகையைப் பெறுவதும் மற்றும் அடிப்படையான தகவலைப் பெறுவதும் சாத்தியமற்று உள்ளது.
- *அரசியல் ஆர்வம் இல்லாமை.* அரசியல் தலைமைக்கு உண்மையைக் கண்டறிவதில் ஆர்வம் இல்லாமல் அல்லது குறைந்தளவாக இருப்பதுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்களிடமிருந்து குறிப்பிடக் கூடியளவு அழுத்தம் இல்லாதிருப்பதும் ஆகும்.
- *ஏனைய அவசரமான முன்னுரிமைகள்.* பெரிய அளவிலான அழிவுகளின் பின்னர் இருப்பவற்றையும் புதிய கட்டுமானங்களையும் பாரியளவில் கவனம் செலுத்த வேண்டியுள்ள நிலைமை.
- *தகைமை போதாமை.* போதிய வளங்களும் நிறுவனரீதியான கட்டமைப்புகளும் பற்றாக்குறையாக இருப்பது.
- *மாற்றுப் பொறிமுறைகளும் சலுகைகளும் இல்லாமை.* நிலவுகின்ற சமூக அடிப்படையிலான பொறிமுறை வன்செயலுக்கு சிறந்த ஏற்புடையதாக இருப்பது அல்லது கடந்தகால குற்றங்களுடன் முரண்படுவதால் தேசிய கலாசாரம் தவிர்க்கப்படுதல்.

இவைகளே மாற்றத்திலுள்ள சமூகங்கள் உத்தியோகபூர்வ உண்மையறிதலை விட்டு விட்டு அதற்குப்

பதிலாக அரச சார்பற்ற பொறி முறைகளுக்கு முன்னுரிமை ஏன் வழங்குகின்றன என்பதற்கான காரணங்களாகும். ஆனால், பொது மக்களின் ஆலோசனையை குறைந்தளவு அல்லது அதுவுமல்லாமல் எடுக்கப்படும் உத்தியோகபூர்வ உண்மையறிதலுக்கெதிரான தீர்மானம் அல்லது கடந்த காலம் பற்றிய விசாரணை செய்தலைத் தடுப்பதில் அக்கறையுள்ள கட்சியினர் குறிப்பிடக் கூடியளவு சந்தேகத்துடனேயே கையாளப்படுவர்.

### உள்ளூரவுள்ள கஷ்டங்கள்

- *தகாத எண்ணங்கள்.* அரசியல் பழிவாங்கலைச் செய்வதற்கு அல்லது தனது சொந்த பொறுப்புக்குரிய கடுமையான கடமைகளை தவிர்ப்பதை இலக்காகக் கொண்டு ஓர் அரசாங்கம் உண்மை ஆணைக்குழுவின் நிதானத்தை பலவீனப்படுத்தி பின்னர் முடிவுகளுக்கு லேசாக சவால் விடவோ அல்லது அவற்றை நிராகரிக்கவோ கூடிய நிலையை உருவாக்க முடியும். குற்றம் கண்டுபிடிக்கின்ற அரசாங்கங்கள் தமக்கு எதிராகப் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து வருகின்ற விமர்சனங்களைத் தடுப்பதற்கு உண்மை ஆணைக்குழுக்களைப் பயன்படுத்துவதால் கடந்த காலத்தை சீர்செய்வதற்கு அது போதாது.
- *பாரபட்சம்.* சாத்தியமில்லாத கடந்த கால முழுமையான விபரத்துடனும் ஒரு இலக்குடனும் ஆணையாளர்கள் பாரபட்சமாக வேலை செய்வது.
- *யதார்த்தபூர்வமற்ற எதிர்பார்ப்புகள்.* ஆணைக் குழுக்கள் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பொது மக்கள் சார்பில் யதார்த்தபூர்வமற்ற எதிர்பார்ப்புகளை வளர்த்து, விரக்தியையும் மற்றும் மேலும் துன்பத்தையும் புதுப்பித்து விடுதல்.

ஒரு பலமான சிவில் சமூகம் மற்றும் சுதந்திர ஊடகம் என்பனவற்றுடனான பொதுமக்கள் அழுத்தத்தின் மூலம் இந்த கஷ்டங்களில் அநேகமான வற்றைக் குறைக்க முடியும். எப்படியிருந்த போதிலும் அவைகள் இல்லாதவிடத்து ஒரு உண்மை ஆணைக்குழுவின் பயனை அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் ஆதரித்து முன்னேறுவதை இணங்க வைப்பது கஷ்டமானது.

### அரசியல் சூழமைவு

மாற்றத்துக்கான சந்தர்ப்பத்தின் போது எழுகின்ற பிரச்சினைகள் ஒரு ஆணைக் குழுவின் உருவாக்கத்தையும் செயற்பாட்டையும் பாதிக்கும். ஒரு வெற்றிகரமான ஆணைக்குழுவை உறுதி செய்வதில் பொது ‘உரிமை முறை’யும் அக்கறையான பங்குபற்றுதலும் சர்ச்சைக்குரிய கலவையாகும்.

### *கட்டுப்படுத்தும் காரணிகள்:*

- அரசின் சம்பிரதாயபூர்வமான கட்டுப்பாட்டை பெறுவதற்காக எதிரணியினருக்கு பொது மன்னிப்பு வழங்க ஒப்புக்கொள்வது போன்ற வற்றில் தங்கிநிற்பதிலும் பொருத்தமற்ற பேச்சுவார்த்தையின் முடிவாகவுமே பெரும்பாலான அரசியல் மாற்றங்கள் இருக்கின்றன.
- வெளியேறிச் செல்லும் அரசினால் பரந்தளவில் ஏற்படுத்தப்பட்ட அழிவுக் குற்றங்களுக்கான சான்றுகள் அங்கே இருக்கின்றன.
- உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் ஆற்றலுக்கு தடையுண்டாக்கும் வகையில் - உதாரணமாக தனிநபர் பயமுறுத்தல் போன்றவை சம்பந்தமாக பொது மக்களுக்கு பயமுள்ளது.
- பொலிஸ் அல்லது இராணுவம் என்பனவற்றின் ஒத்துழைப்பு கிடைப்பது குறைவாக இருப்பது மற்றும் நீதித்துறை நிர்வாகத்தில் ஊழல் அல்லது பலவீனம் என்பவை வேலையைக் கெடுத்துவிடும்.

- படைக்குறைப்பு, ஆயுதக்களைவு மற்றும் மீள்ஒருமைப்பாடு போன்ற மெலிதான வழிமுறைகள் பற்றிய ஆணைக்குழுவின் விசாரணைகளும் பரந்தளவிலான பயங்களை ஏற்படுத்துகின்றன.

*சாத்தியமான காரணிகள்:*

- ஓர் உண்மை ஆணைக்குழுவை அமைப்பதில் பொது மக்களின் பலத்த ஆதரவு.
- ஒரு வெற்றிகரமான செயற்பாடுள்ள சிவில் சமூகம் (மற்றும் குறிப்பாக பலமான பாதிக்கப் பட்ட குழுக்கள், மனித உரிமைக் குழுக்கள், மதத் தலைவர்கள் மற்றும் புத்திஜீவிகள்).
- துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் பரவலான சமூக அடையாளம்.
- விமர்சனரீதியான சுதந்திர ஊடகம்.
- உறுதியான சர்வதேசக் கண்காணிப்பு மற்றும் அழுத்தம்.

**ஒன்று சேர்க்கை**

*ஒரு ஆணைக்குழுவானது அதன் உறுப்பினர்கள் நீதியான முறையில் சமநிலையை உறுதிப்படுத்தும் வகையில் நேர்மையாக முயற்சிப்பவர்களாகவும், ஒரு கலந்தாலோசனை வழிமுறையின் ஊடாக தெரிவு செய்யப்பட்டு சர்வதேச ஆதரவுபெற்றவர்களாகவும் பொதுவாக பொதுமக்களின் பரந்தளவான சேர்க்கையாகவும் இருக்க வேண்டும்.*

ஓர் உண்மை ஆணைக்குழுவுக்கு தெரிவு செய்யப்படும் நபர்களிலேயே அதன் இறுதி வெற்றி அல்லது தோல்வி தங்கியுள்ளது. ஆணையாளர்களின் பலவீனமான நிர்வாகத்தினாலேயே பல்வேறு ஆணைக்குழுக்கள் பிரச்சினைகளுடன் இயங்குகின்றன. ஆணையாளர்கள் பொதுவாக ஆணைக் குழு நிர்வாகத்தின் அன்றாட வேலைகளில் ஈடுபடுவதில்லை. அவர்கள் விசாரணைகளுக்கு உத்தரவிடுதல், ஆணைக்குழுக் கொள்கையை வடிவமைத்தல், இறுதி அறிக்கை மீது கடைசி வார்த்தையைத் தெரிவித்தல் என்பன வற்றையே வழமையாகச் செய்கின்றனர். ஆணைக்குழுவின் பொதுவான தோற்றப்பாட்டைப் பொறுத்த வரையில் ஆணையாளர்களின் தனிப்பட்ட மற்றும் அரசியல் அதிகாரமானது கூட பிடிவாதமான அதிகாரித்தனமான கையாளுகைக்காக சர்ச்சைக்குரியதாகும்.

ஒரு நீதியான சமநிலையை உறுதிப் படுத்தும் வகையில் கலந்தாலோசனை முறையின் மூலம் உறுப்பினர்கள் அரசியல் கருத்துக்கள், இனத்துவ அல்லது மதக்குழுக்கள் மற்றும் பால்நிலை என்பன கொண்ட பிரதிநிதித்துவம் அமையும்போதே ஒரு ஆணைக்குழு பொதுவாக பொது மக்களின் பரந்த ஆதரவையும் சர்வதேச ஆதரவையும் பெறமுடியும்.

**ஆணை மற்றும் அதிகாரங்கள்**

- *நோக்கங்கள்*: ஆலோசனையின் எல்லைகள் பிரதான நோக்கங்களை அடையக்கூடியதாக அமைக்கப்பட வேண்டும். மீண்டும் யுத்தத்திற்கு அல்லது எதேச்சாதிகார ஆட்சிக்குத் திரும்புவதைத் தடுக்கும் வகையிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிந்துரைகளை உருவாக்கும் வகையிலும், தேசிய மீளிணக்கத்திற்கு உதவும் வகையிலும் கடந்த காலம் பற்றிய உண்மைகள் உருவாக்கப்பட வேண்டும்.
- *செயற்படும் காலம்*: ஆரம்பிக்கும் முடிவுறும் திகதிகள் இணக்கமானதாகவும் குறுகிய கால நீடிப்பை அனுமதிப்பதாகவும் இருக்க வேண்டும். எவ்வாறாயினும் செயற்பாட்டுக்கான மொத்தமான சாத்தியமான காலம் தீர்மானிக்கப்பட வேண்டும். மற்றும்படி ஆணைக்குழு கஷ்ட காலத்திற்கு இழுபட்டுச் செல்லுமானால் அது அதன் முக்கியத்துவத்தை இழந்து இறுதியில் பொது மக்களின் ஆர்வத்தை இழந்துவிடும். 1-2 வரையான வருட செயற்பாட்டுக் காலம் விருப்பத்துக் குரியதாகும்.

- ***ஆராய்வுக்குள்ளாக்கப்படக்கூடிய வன்செயல் மாதிரிகள்:*** செயற்பாட்டின் முக்கிய கவனம் மனித உரிமை மீறல்களில் செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் மனித உரிமை மீறல்களில் பல்வேறுவிதமான வகைகள் இருப்பதுடன் அவற்றில் பல ஒரு தனி ஆணைக்குழுவால் ஒரு குறுகிய காலத்தில் அர்த்தபுஷ்டியுடன் கையாளக்கூடியதாகவும் இருக்கலாம்.
- ***கண்காணிப்பின் கீழ் வைப்பதற்கான காலம்:*** இது ஆரம்பத்திலேயே தெளிவுபடுத்தப்பட வேண்டும். இது அடிக்கடி தர்க்கத்துக்குரியதாகும். கால அவகாசம் என்பது பொதுவாக மோசமான அல்லது பெருந்தொகையான வன்செயல்கள் நடைபெறுகின்ற சரித்திரக் காலக்கட்டத்துடன் தொடர்புபட்டிருப்பதோடு உள்நாட்டு யுத்தம் அல்லது எதேச்சாதிகார ஆட்சிக் காலத்துடன் அடிக்கடி தொடர்பு கொண்டதாகவும் இருக்கும்.
- ***ஆணைக்குழுவின் செயற்பாடுகள்:*** எந்த ஒரு ஆணைக்குழுவும் தனது ஆய்வுகள் மற்றும் விசாரணைகளை மேற்கொள்வதும் கண்டுபிடித்தவைகளையும் பரிந்துரைகளையும் கொண்ட இறுதி அறிக்கையை வெளியிடுவதும் சாதாரணமாக அதன் ஆணையை பிரபல்யப்படுத்துவது உள்ளிட்ட அதன் குறிக்கோள்களை அமுல்படுத்துவதை பிரதான செயற்பாடாகக் கொண்டிருக்க வேண்டும்.
- ***அதிகாரங்கள்:*** குறைந்தபட்சம் ஆணைக் குழுக்கள் பயனுள்ள தகவல் வழங்கக்கூடிய எவரையும் பேட்டி காணும் சக்தியுள்ளவையாகவும், பொது அதிகாரிகளின் பூரண ஆதரவைப் பெறக்கூடியவர்களாகவும், பகுதிகளுக்கு, தேவையான எந்த ஒரு விஜயத்தையும் (முன் அறிவித்தல் இன்றி) மேற்கொள்ளக்கூடியதாகவும் இருக்க வேண்டும். ஆணைக்குழுக்களின் அதிகாரங்களை அதிகரிக்கும் போது, நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிடும் அதிகாரம், சோதனை செய்யும் மற்றும் கைப்பற்றும் அதிகாரங்கள், மற்றும் சில விடயங்களில் சாட்சிகளுக்கு பாதுகாப்பளித்தல் என்பன உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த அதிகாரங்கள் அளிப்பதானது கவனமாக சமநிலைப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு மேலதிக செயற்பாட்டு வழிகளும் ஓர் உண்மை ஆணைக்குழுவிலிருந்து தூர விலகி நீதிமன்ற வழிமுறையை நோக்கியதாக இருக்க வேண்டும்.
- ***தண்டனைகள்:*** ஒரு ஆணைக்குழுவுக்குப் பொதுவாக, ஒத்துழைப்பு வழங்காமல் எதிராக செயற்படுபவர்களுக்கு அபராதம் விதித்தல், சிறைத்தண்டனை வழங்குதல் அல்லது இரண்டும் வழங்குதல் போன்ற தண்டனைகளை வழங்கக்கூடிய போதிய அதிகாரங்கள் உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.
- ***தொடர்ந்து செய்தல்:*** ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையைப் பகிரங்கப்படுத்துவதிலும் அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதிலும் ஓர் அரசாங்கம் கொண்டுள்ள கடப்பாடுகள் என்ன? ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதற்கிணங்க செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் ஆணைக் குழுவின் கோப்புகளையும் பதிவேடுகளையும் பரிசோதனை செய்து பாதுகாத்து பின்னர் பயன்படுத்தும் வகையில் வைத்திருப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

**வளங்கள் தொடர்பான விடயங்கள்**

போதியளவு வளங்களை வழங்க முடியாதுவிடின் சிறப்பாகத் திட்டமிட்ட உண்மை அறியும் ஆணைக்குழுவாயினும் வெற்றிகரமாகச் செயற்பட முடியாது, புதிய ஆணைக்குழுவின் சாதாரணச் செலவு 5-10 மில்லியன் அமெரிக்க டொலர் வரை உயர்ந்துள்ளது. தேசிய அரசின் நிதியோடு கொடையாளி அரசின் நிதியும், தனியார், நிறுவனங்களின் நிதியும் ஒன்று சேரும் போக்கே காணப்படுகின்றது.

**உண்மை அறியும் ஆணைக்குழுவைச் செயற்படுத்தல்**

*தயாரிப்புக் கடமைகள்:*

- ஒரு உத்தியோகத்தர் திட்டத்தையும் மற்றும் வாடகைக்கு உத்தியோகத்தர் அமர்த்துதலையும் மேம்படுத்தல்.
- உள்ளொழுங்குமுறைகளையும் கொள்கைகளையும் வகுத்தல்.
- ஒரு வேலைத்திட்டத்தை அங்கீகரித்தல்.
- களஞ்சியப்படுத்தல், ஸ்தாபனம் மற்றும் பதிவேடுகள், தகவல்கள் சீர்படுத்தல் என்பவற்றுக்கான பலமான தகவல் தளத்தை திட்டமிட்டு நிறுவுதல்.
- ஆரம்ப பின்புல ஆய்வு.
- தேசிய, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும், ஐ.நா., வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் ஏனைய பகுதியினரிடமிருந்தும் இருக்கின்ற ஆவணங்களைச் சேகரித்தல்
- பொதுக் கல்வியூட்டல் திட்டமொன்றை வரைதல்.
- வரவு-செலவு திட்டத்தை தயாரித்தலும் நிதி திரட்டுதலும்.

***ஓர் உண்மை அறியும் ஆணைக் குழுவின் ஆயுட்காலத்தில் மேற் கொள்ளப்படும் பிரதான நடவடிக்கைகளானவை:***

- *வெளிச்செல்கை.* பொது மக்களின் எதிர்பார்ப்புகளைச் சமாளிக்கும் மற்றும் பொதுவான நற்பெயரை அடைவதிலும் தகுதி பெறவும் தேவைகளை காத்திரமாக விளக்குவதிலும் தகவல்களின் அடிப்படையில் காத்திரத்தை அடையவும் உண்மை ஆணைக்குழு பொதுமக்களிடம் மோதல் ஆய்வுரீதியாக முக்கியமானதாகும். வீடியோக்கள், பிரசுரங்கள், வெளியீடுகள் மற்றும் தகவல் அறியும் பொதுக்கூட்டங்கள் என்பனவற்றின் மூலம் ஆணைக்குழு வெளிச் சென்று தனது தீர்ப்புகளையும் பாத்திரத்தையும் விளக்க முடியும்.
- *அறிக்கை எடுத்தல்:* பாதிக்கப்பட்ட தனிநபர்களிடமிருந்து உத்தியோகத்தர் பெறும் அத்தாட்சிகளையும் தனிப்பட்ட கூட்டங்களின் மூலம் பெறுபவற்றையும் அறிக்கை வடிவில் நிரப்புவதன் மூலம் கூடுதலான தகவல்களைத் திரட்ட முடியும். அறிக்கை எடுப்பதானது ஒரு அனுதாபமான, பாதுகாப்பான சூழலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமது துன்பமான அனுபவங்களை மீள்பார்வை செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதுடன், கடந்த காலம் பற்றிய உண்மைகளை ஸ்தாபிக்கும் இலட்சியத்திற்கும் பங்களிப்புச் செய்து வலுவூட்டுகிறது. கூடுதலான பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் சாட்சிகளுக்காகவும் அறிக்கை எடுப்போர் ஆணைக்குழுவுடன் தமது தனிப்பட்ட தொடர்பை மட்டுமே கொண்டுள்ளனர். பிரமாணத்தின் அடிப்படையில் வாக்கு மூலம் அளிப்போரிடமும் சமூகங்களிடமும் பெறுபவை குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்தவையும் நிலைத்து நிற்கும் தன்மை உடையவையும் ஆகும்.
- *ஆய்வும் விசாரணையும்:* ஆய்வுப் பிரிவுகளும், பொலிஸ் வகையினதான விசாரணைக் குழுக்களும் பெரிய அளவிலான வரவு-செலவு திட்டத்திலும் பலமான ஆணையுடனும் உண்மை ஆணைக்குழு அமைப்பின் பகுதியாக வளர்ந்துவருவன. பல ஆணைக் குழுக்கள் ஒரே திணைக்களத்தில் ஆய்வு மற்றும் விசாரணை இணைப்புள்ளவையாக உள்ளன. தரவு முறைகள், உண்மைக் குழுக்கள் எண்ணற்ற தகவல் தொகுதிகளைக் கையாள்கின்றன. இது களஞ்சியப் படுத்தல், ஸ்தாபனம், சீராக்குதல் என்பனவற்றுக்கு ஒரு தாக்கமான தரவுத்தளத்தை வேண்டி நிற்கிறது. முக்கியமான சரித்திரரீதியான பெரும் வடிவத்திலான ஆய்வைப் பெறுவதற்கு ஒரு பலமான தரவு முகாமைத்துவ முறை உதவியளிக்கிறது.
- *பகிரங்க விசாரணைகள்:* இவை அண்மைக் கால வளர்ச்சியுடன் தொடர்புடையன. அங்கு பகிரங்க விசாரணைகளை நடாத்துவதற்கான வன்மையான வாதங்கள் உள்ளன.

சம்பிரதாயபூர்வமாக கடந்தகால தவறுகளை அங்கீகரிக்கவும், பாதிக்கப் பட்டவர்கள் பற்றிய பொது விளக்கப் பாட்டையும் அனுதாபத்தையும் ஊக்கு விக்கவும் உண்மையை தொடர்ந்து மறுக்கும் சமூகத்தின் குறிப்பிட்ட பிரிவினரின் போக்கின் சாத்தியப் பாட்டைக் குறைக்கவும் அதன் வேலையில் தெளிவை ஏற்படுத்தவும் உண்மை ஆணைக்குழுவின் ஒரு பகிரங்க அரங்குக்கு முன்னால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உயிர் தப்பி வாழ்பவர்களுக்கும் தமது கதையைச் சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. அத்துடன் பகிரங்க விசாரணைகள் கடந்த காலத்தைப் பற்றிய தேசியரீதியான உண்மையான விவாதங்களைத் தூண்டுவதன் மூலம் உண்மை ஆணைக்குழுக்களை உற்பத்தியிலிருந்து வழிமுறைக்கு (உ+ம்: அதன் இறுதி அறிக்கை) மாறுவதற்கு உதவுகின்றது. ஆணை யாளர்களினதும், பாதிக்கப்பட்டவர் களினதும் பாதுகாப்புக் கஷ்டங்களும் நேரம் மற்றும் வளக்கட்டுப்பாடுகளும் சேர்ந்து நீதி ஆணைக்குழு விசாரணை களை இரகசியமான இடத்தில் நடைபெறுவதை வேண்டுகின்றன.

- *மனவெழுச்சியான ஆதரவு:* சில பாதிக்கப்பட்டவர்களைப் பொறுத்த வரை உண்மை ஆணைக்குழு அவர்களை மீளவும் மன அதிர்ச்சிக்கு இட்டுச்சென்ற அனுபவத்தைக் காட்டுகின்றது. இந்தப் பிரச்சினையை கையாளுவதை அல்லது இவற்றுக் கெதிராகத் தற்காத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை அண்மைக் காலமாக உண்மை ஆணைக் குழுக்கள் விளங்கிக்கொள்ளத் தொடங்கியுள்ளன.
- *இறுதி அறிக்கைகள்:* இவை மனித உரிமைக் கல்விக்கான ஒரு வளமாகவும் அல்லது தொடர்ந்து வருகின்ற வழக்கு தொடர்தலுக் காகவும் இருப்பதுடன் ஆணைக் குழுக்களின் சட்டப்பூர்வத்தன்மையை நிலைப்படுத்தி வைக்கின்றன. நன்கு ஆவணப்படுத்தப்பட்ட வரன்முறையான பலமான இறுதி அறிக்கைகள் திரிபுபடுத்தலுக்கு எதிரான தீர்க்கமான பாதுகாப்பாகும். இருந்தபோதிலும் ஒரு இறுதி அறிக்கையின் தாக்கமானது பெரும்பாலும் சூழவுள்ள காரணி களிலேயே தங்கியுள்ளது. கண்டு பிடிக்கப்பட்டவையின் வெளிப்படுத்தல் களின் பாரம்பரிய மற்றும் மாற்றீட்டு இரண்டினதும் தன்மை, அது எப்பொழுது, எவ்வாறு வெளியிடப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டது, ஊடகங் களில் அது எவ்வாறு வரவேற்புப் பெற்றது என்பதிலேயே தங்கியுள்ளது.
- *பெயர்களைப் பெயரிடுதலும் தகுந்த வழிமுறையும்:* சில உண்மை ஆணைக் குழுக்கள் மனித உரிமைக் குற்றங் களுக்குப் பொறுப்பானவர்கள் எனக் கண்டு பிடிக்கப்பட்ட தனிநபர்களின் பெயர்களைப் பகிரங்கப்படுத்தும் ஆணையைக்கொண்டுள்ளன. மற்றவை களுக்கு இவ்வதிகாரம் நேரடியாக வழங்கப்படாவிட்டாலும் மறைமுக வழிகளில் பெயரிடுதலை உருவாக்க முடியும். இந்த விடயம் பதட்டத்தை மீண்டும் கொண்டு வரக்கூடிய ஒன்றாகும். இரண்டு முரண்பாடான கோட்பாடுகளின் உடன்படாமையாவன: குற்றம்சாட்டப்பட்ட தனி நபர்கள் தமக்கு முன்னால் உள்ள குற்றங்களிலிருந்து தாமாகவே தற்காத்துக் கொள்வதற்கு தகுந்த வழிமுறை அனுமதிக்கப் படுவதை வேண்டுகின்றது. அத்துடன் அவர்களுடைய குற்றங்களுக்கு தெளிவான சான்றுகள் உள்ளபோது அதற்குப் பொறுப்பான நபர்களின் பெயர்களும் பூரண உண்மையைச் சொல்வதற்குத் தேவைப்படுகின்றது.
- *நடவடிக்கையில் குற்றவாளிகளின் ஈடுபாடு:* தனிநபர் மன்னிப்பு வழங்குவதற்கான அதிகாரத்தை அது கொண்டிருக்கின்றது என்பதனால் தென் ஆபிரிக்காவின் ரி.ஆர்.சி (TRC) தவிர, கடந்தகால உண்மை ஆணைக் குழுக்கள் குற்றவாளிகளிடமிருந்து அர்த்தபுஷ்டியுள்ள ஒத்துழைப்பைப் பெறுவதில் தோல்விகண்டுள்ளன. இந்த

வகையான ஒரு 'மன்னிப்புக்கான உண்மை' வழிமுறை தார்மீக, சட்ட மற்றும் அரசியல் விடயங்களில் நெருக்கடியைக் கிளப்புகின்றது.

- *முயற்சிகளைத் தொடருதல்.* ஒரு உண்மை ஆணைக்குழு ஒருக்கால் தனது இறுதி அறிக்கையைச் சமர்ப்பித்ததும், அதன் கோப்புகள் ஆவணப்படுத்தப்பட்டதும் மற்றும் அது கலைக்கப்பட்டதும் அதனால் வெளியிடப்பட்ட சிபார்சுகள் இயற்கையாகவே ஏனையோர் மீது வீழ்கிறது. துரதிர்ஷ்டவசமாக இது ஒரு அடிக்கடி நிகழும் பிரதான தவறாக விருப்பதுடன், அதைச் செய்ய வேண்டிய சட்டரீதியான கடப்பாடும் அரசாங்கத்துக்கு ஏற்படுகின்றது. அரசியல் உறுதிப்பாடு போதாமை அல்லது நிறுவனரீதியான அல்லது நிதி போதாமை என்பன வற்றால் இது ஏற்படுகின்றது. எப்படியிருந்த போதிலும் இவ் விடயத்தில் உண்மை ஆணைக்குழுக்கள் பொருத்தமான கண்காணிப்பையும் தொடருதலையும் உறுதிப்படுத்துவதற்கு ஏதுவான பொறிமுறைகளைச் சிபார்சு செய்கின்றன.

மாறுதல் காலகட்டத்தில் உள்ள நாடுகளில் ஜனநாயகம் மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி என்பவற்றை அடைந்து ஸ்திரப் படுத்துவதற்கு பல்வேறு பொறிமுறைகளில் உண்மை ஆணைக் குழு ஒன்று மட்டுமே ஆகும். மாறுதல் காலத்துக்கான ஒரு பூரணமான திட்டத்தின் ஏனைய சாத்தியமான அம்சங்களைப் பொறுத்தவரையில், நீதி விசாரணைகள், மாற்றத்திற்குரிய நியாயமான நிகழ்ச்சித் திட்டங்கள் (Vetting Programmes), சட்டச் சீர்திருத்தம், பாதிக்கப்பட்டவருக்கான இழப்பீடு வழங்கல், மற்றும் இழந்த உரிமைகளை மீள வழங்கல், மீள் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் என்பன அடங்கும். மாறுதல் காலத்துக்கான நீதியின் இவ்வாறான மாறுபாடான மூலங்களின் ஒருமைப்பாடு, சேர்க்கை என்பனவற்றுக்கு இவை புதிய போக்கை உருவாக்கும்.

## 9 நஷ்டஈடு

***நஷ்டஈட்டு நடவடிக்கைகள் கடந்த காலத்துக்கும் எதிர்காலத்துக்குமான ஒரு பாலமாகும். இது நஷ்டஈடு வழங்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களின் பின்தங்கிய குறிக்கோள் பார்வையையும் அரசியல் சீர்திருத்தத்தின் முன்னேறிய குறிக்கோளையும் இணைக்கின்றது.***

மாற்றக்கால நீதியானது நஷ்டஈட்டுக் கருத்துக்கு மறுவடிவம் கொண்டுள்ளது. இந்த எண்ணப்பாடு கடந்த காலத்தையும் நஷ்டஈட்டையும் மூலமாகக் கொண்டது. எப்படியிருந்த போதிலும் இன்று இது எதிர்கால மூலமுள்ள நடவடிக்கைகளையும் அதே நேரத்தில் முக்கியமான அடையாளத்தையும் கொண்டுள்ளது. இங்கு நான்கு அடிப்படை வகையான நஷ்டஈடுகள் உள்ளன:

- *நஷ்டஈட்டு உரிமைகளும் கொள்கைகளும்:* தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களுக்கூடாக பாதிக்கப்பட்டவர்கள் நஷ்டஈடு கோரும் உரிமை உள்ளது என்பதுடன் அது நஷ்டஈட்டு கொள்கைகளின் வளர்ச்சிக்கும் இட்டுச் செல்கின்றது.
- *தனிப்பட்ட மற்றும் கூட்டு நடவடிக்கைகள்:* தனிப்பட்ட நடவடிக்கைகள் விசேடமாக தனிப்பட்ட பாதிப்புற்றவர்களின் விடயங்களையே கவனத்திற்கு எடுக்கின்றன. ஆனால் தங்களது குழு அங்கத்துவம் காரணமாக கூட்டான பாதிப்புகளுக்குள்ளான முழு இனத்துவ, மத மற்றும் குழுக்களைப் பொறுத்த வரையில் மேலதிகமான கூட்டு நஷ்டஈட்டு நடவடிக்கைகளை (உதாரணமாக, வைத்திய சேவைகள், கல்வி மற்றும் வேலை வாய்ப்பு) அவை அடிக்கடி வேண்டி நிற்கின்றன.
- *நிதி மற்றும் நிதியற்ற நடவடிக்கைகள்:* நிதி இழப்பீடு என்பது, நஷ்டஈட்டு நடவடிக்கையில் மிகவும் தெளிவான ஒன்றாகும். ஆனால் அடிக்கடி மேலதிக

மாக நிதியற்ற நடவடிக்கைகளை (ஏனென்றால் வளப்பற்றாக்குறையால் அவசியமாக) வேண்டுகின்றது. குடியுரிமையை மீட்டல் 'காணாமல் போனவர்களுக்கு' மரணச் சான்றுப் பத்திரம் வழங்குதல், குற்றப்பதிவுகளை ரத்துச் செய்தல், ஈமக்கிரியைகள் மற்றும் புதைத்த பிரதேங்களை தோண்டியெடுத்தல் என்பவற்றுக்கு உதவி செய்தல் போன்றவையே அவையாகும்.

- *ஞாபகார்த்த மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகளானவை* கடந்த கால காட்டுமிராண்டித்தனத்தை அங்கீகரித்து அதற்கான பின்னோக்கிய பார்வையிலான திட்டங்கள் அல்லது தொடரும் பொருளாதார முன்னேற்ற மின்மைக்கான மிகவும் நிகழ்கால நடவடிக்கைகளாகும்.

### *ஏன் நஷ்டஈடு?*

நஷ்டஈட்டு நடவடிக்கைகள் கடந்த காலத்திற்கும் எதிர்காலத்துக்குமான ஒரு பாலமாகும். இது பாதிக்கப்பட்டவர்களின் இழப்பீட்டின் பின்தங்கிய பார்வையிலான குறிக்கோளை அரசியல் சீர்திருத்தத்தின் முன் நோக்கிய பார்வைக்குறிக்கோளுடன் இணைக்கின்றது. மோதலுக்குப் பிந்திய ஒரு புதிய அரசு, நஷ்டஈடு வழங்க வேண்டியதன் பாரதுூரத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றது. சர்வதேச சட்ட விதிகளின் பிரகாரம், பின்னைய ஆட்சி அல்லது அரசாங்கத்தின் பொறுப்பு, முன்னைய ஆட்சியினால் இழைக்கப்பட்ட அத்துமீறல்களைச் சந்தேகமறக் கடப்பதிலேயே உள்ளது.

நஷ்டஈட்டுக் கோரிக்கைகள் பெரும்பாலும் பரஸ்பர வலுப்படுத்தல், வளங்கள் என்ற இரண்டு வித்தியாசமானவற்றிலேயே தங்கியுள்ளன. அடிப்படை உணர்வுகள் நீதியைச் செய்வதிலும் மற்றும் தீங்கு செய்யாமையிலும் மற்றும் சட்டப்படி, அதாவது சர்வதேச, தேசிய சட்டப்படியானவையாகும்.

### சட்டரீதியான மற்றும் சட்டரீதியற்ற அணுகுமுறைகள்:

### சட்டரீதியான அணுகுமுறை

#### *வரையறைகள்*

- தகுந்த நீதிஅமைப்புச் செயற்பாடு நிலவுகின்ற முன் சூழலுக்கே ஏற்றது. மோதலுக்குப் பிந்திய சமூகங்களில் இந்த விடயம் மிகவும் அரிதானது.
- குற்றவியல் நீதி அமைப்பானது பெரும் எண்ணிக்கையான அத்துமீறல்களை அல்லது குற்றவாளிகளைக் கையாளுவதற்கோ அல்லது நேரடி மற்றும் மறைமுக பாதிப்பாளர்களுக்காகவோ வரையப்பட்டதல்ல.
- ஒரு சட்டரீதியான அணுகுமுறை தனிப்பட்ட குற்றத்தைக் கையாளுவதற்காக வரையப்பட்டது. ஒரு மாற்றத்துக்கான காலகட்டத்தில் குற்ற விடயம் மிகவும் குழப்பகரமாகவும் ஒரு விசாலமான, கூட்டு அணுகுமுறையையும் வேண்டுகின்றது.
- ஒரு சட்ட நடவடிக்கையின் போது குற்றமிழைத்தவர்களின் மனித உரிமைகள் மதிக்கப்படும். அப்படியிருக்கையில் இழப்பீட்டு ஆணைக்குழு தனிப்பட்ட குற்றச்சட்டத்தை உருவாக்க உதவத் தேவையில்லை.
- ஒரு சட்டவிதியின் கீழ் 'எல்லா நியாயமான சந்தேகத்திற்கும் அப்பால்' இது பொறுப்பானது என்பதை நிரூபிப்பது கஷ்டமானது. ஒரு சட்டரீதியற்ற அமைப்பு நஷ்டஈட்டுத் தீர்ப்பில் உரிமை பாராட்டுபவருக்கு சந்தேகத்தின் அனுகூலத்தை வழங்க முடியும்.
- நன்மை பெறுபவர்கள் - குற்றமிழைத்தவர்கள் இவர்களில் மீறல் நடவடிக்கைகளுக்கு யார் சட்டப்படி பொறுப்பில்லையோ - அவர்கள் இயல்பாகவே நஷ்டஈடு வழங்கப்பட வேண்டியவர்களாகையால் இதில் சட்டரீதியான அணுகுமுறைக்குச் சாத்தியமில்லை. பயன் பெறுவோர் ஒரு சட்டரீதியற்ற பொறிமுறையினுாடாக ஈடுபடுவது சுலபமானதுடன், இது மீளிணக்கம் மற்றும் ஐக்கியம் என்பவற்றை விசாலமான முறையில் முன்னேற்று

வதன் ஒரு பகுதியாகவும் இருக்கும்.

- சட்ட நடவடிக்கைகள் வேண்டுமெனத் தேர்ந்தெடுக்கும் உரிமையுடன் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. ஏனெனில் மன்னிப்புக்கான முன்னைய ஏற்பாடுகள், பாதுகாப்பு, சட்டம் என்பன மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
- பலர் அடிக்கடி பாதிக்கப்படுவதினால் சிவில் உரிமைகளை முன்னெடுப்பதற்குப் பண வசதி இல்லாதிருக்கின்றது அல்லது குற்றவியல் நடவடிக்கை எடுப்பதில் பங்குபற்ற முடியாதுள்ளது.

*தகுதிகள்*

- பாதிக்கப்பட்டவர்களின் இழப்புக்களை ஈடுசெய்வதற்கான உரிமையில் சகித்துக் கொள்ள முடியாத சில செயற்பாடு பின்பற்றப்படுகையில் ஒரு சட்டத்தீர்மானம் ஒரு கடுமையான சமிக்ஞையை அனுப்புகின்றது.
- ஒரு வெற்றிகரமான சட்டரீதியான உரிமைக் கோரிக்கையானது துன்பத்தை ஏற்றுக்கொண்டு, நஷ்டஈடு வழங்கும்படி தூண்டும் மிகவும் உறுதியான தர்க்கமாக இருக்கின்றது.
- ஏனைய பொறிமுறைகள் கூட பாதிக்கப்பட்டவர்களின் எதிர்பார்க்கப்படும் நஷ்டஈட்டுக் கோரிக்கையை மீண்டும் நிரப்புவதற்கான சட்டரீதியான உரிமையை உருவாக்கும்.

## *சட்டரீதியற்ற அணுகுமுறை: மூன்று உதாரணங்கள்*

### *1. ஐ.நா இழப்பீட்டு ஆணைக்குழு (UNCC)*

ஐ.நா.இ.ஆ.1990ல் குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த போது பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக ஐ.நாவால் உருவாக்கப்பட்டது. ஈராக்கின் எண்ணெய் ஏற்றுமதிக்கு விதிக்கப்படும் வரியின் மூலம் இதற்கான நிதி பெற்றுக் கொள்ளப் பட்டது. இழப்பீட்டுக்கான நஷ்டஈடு கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டது. 2001 ஜூலையில் ஆணைக்குழு 2.6 மில்லியனுக்குக் கூடுதலான முறைப்பாட்டுக் கோரிக்கையைப் பெற்றதோடு அதற்கான பெறுமதி 35.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. மீண்டும் 10,000 கோரிக்கைகள் வந்ததோடு அவற்றின் பெறுமதி 200 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

சரியான கட்டமைப்பை உருவாக்குதல், ஒரு செயலகம் மற்றும் நிதியளிக்கும் பொறிமுறையை உருவாக்குதல், விண்ணப்பிப்பதற்கான தகுதியான விதிகளை உள்ளடக்குதல், வகைப்படுத்தல், வெவ்வேறு வகையான காயங்களுக்கான கொடுப்பனவுத் தொகையைத் தீர்மானித்தல், இழப்பீட்டின் உச்சதொகை என்பனவற்றைக் கொண்ட தாக்கமுள்ள திட்டமொன்றை பெரிய அளவில் போதிய அரசியல் ஈடுபாட்டுடன் முன்னெடுப்பது சாத்தியம் என ஐ.நா.இ.ஆ. எண்ணியது. எவ்வாறிருந்த போதிலும் நஷ்டஈட்டு நோக்கங்களும் மீளிணக்கப் பாடும் மீண்டும் முற்றாக தொடர்பற்றுப் போயின. தனிப்பட்ட பின்னோக்கிய பார்வையால் நஷ்டஈடானது, தொழில் நுட்ப, நிதிச் செயற்பாடாக குறுக்கப்பட்டது.

### *2. உண்மை ஆணைக்குழுக்கள்*

தாக்கமுள்ள ஒரு உண்மை ஆணைக் குழுவின் வேலையானது தன்னியல்பாகவே நஷ்டஈட்டுக்கான சில பரந்த வடிவத்துக்கு இட்டுச் செல்லும். ஒரு பூரணமான நஷ்டஈட்டுத் திட்டத்தில் முக்கியமான கூறுகளாக, பகிரங்க ஏற்றுக்கொள்ளல்கள், மன்னிப்புக்கோருதல் அல்லது வருத்தம் தெரிவித்தல், நினைவு நிகழ்வுகள், சீர்திருத்தத் துக்கான பரிந்துரைகள் என்பன அடங்கியிருக்கும். ஆனால் கொடுப்பனவு என்பது மூலக்கூறாகும். தென்னாபிரிக்க ரி.ஆர்.சி (TRC) ஐந்து அம்சக் கொள்கையொன்றைப் பரிந்துரைத்துள்ளது: (அ) அவசரமான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் (ஆ) ஆறு வருடங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு தனிப்பட்ட நஷ்டஈட்டுக்கு அனுமதித்தல் (இ) அடையாள, சட்ட, மற்றும் நிர்வாகரீதியான நஷ்டஈட்டு நடவடிக்கைகள் (ஈ) சமூக மீளிணக்க திட்டங்கள் மற்றும் (உ) நிறுவனரீதியான

சீர்திருத்தங்கள். ரி.ஆர்.சி (TRC) சட்டமானது தனிப்பட்ட நஷ்டஈடு வழங்கும் முறைமையை நிர்வகிப்பதற்கு ஜனாதிபதி நிதியத்தை அமைப்பதற்கு உதவியளிக்கின்றது. நிதிக்கான கொடுப்பனவுகள் சில வேளைகளில் தேசிய வரவு-செலவுத் திட்டத்திலிருந்தும், சர்வதேச, உள்ளூர் நன்கொடைகளிலிருந்தும் அவற்றின் வட்டியிலிருந்தும் கிடைக்கின்றன.

நஷ்டஈடானது உண்மையுடனும் நீதியுடனும் தொடர்புபட்டுள்ளது: இழப்பீடானது பாதிக்கப்பட்டவர்களை உண்மை பேசுவதிலிருந்து தடுக்குமானால் அது அவர்களுடைய மனோரீதியான புனர் வாழ்வைத் தடுக்கும்.

### *3. தேசிய நிர்வாக அமைப்புகள்*

பல்வேறு நாடுகள், முன்னைய ஆட்சிகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக நஷ்டஈட்டு நிதியங்களை அல்லது ஆணைக் குழுக்களை அமைத்துள்ளன. அவை உண்மை ஆணைக்குழுவின் இணைவுகளாகவோ அல்லது சுதந்திரமாக ஸ்தாபிக்கப்பட்டவையாகவோ உள்ளன. உதாரணங்கள் வருமாறு:

- பிரேசிலின் இராணுவ ஆட்சியின் கீழ் ஆயுதக் கிளர்ச்சி இயக்கம் ஒன்றை நடாத்திக் காணாமல் போன 135 பேரின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக 1995ல் பிரேசில் நஷ்டஈட்டு ஆணைக்குழுவை அமைத்தது.
- சட்டபூர்வமற்ற முறையில் சொத்துக்களை அரசு சுவீகரித்ததால் ஏற்பட்ட இழப்புக்கு பெருந்தொகை இழப்பீடுகளை வழங்குவதற்காக தேசிய அழிவுக் கோரிக்கையைத் தீர்த்து வைக்கும் காரியாலயத்தை 1991 ஆண்டு ஹங்கேரிய சட்டம் ஒன்று உருவாக்கியது.
- குறிப்பிட்ட மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேடமாக காணாமல் போனவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக 1991ல் ஆர்ஜன்டீனா நஷ்டஈட்டுச் சட்டமொன்றை நிறைவேற்றியது. அரசாங்க மனித உரிமைகள் காரியாலயமே இதை அமுல்படுத்தும் அமைப்பாகும்.

### *நஷ்டஈட்டுப் பயனாளிகள்*

ஒருமைப்பாட்டு அணுகுமுறை இணைக்கப்பட்டதும் நீதி மற்றும் மீளிணக்க பொறிமுறைகளின் கீழ் பாதிக்கப்பட்டவர்கள் அவற்றைப் பாவித்து சமாந்திரமாக பயனாளிகளை வகைப்படுத்த வேண்டும். முதலாவதாக நஷ்டஈடு என்பது ஒரு நீதிமன்றத்தில் சோதனைக்குட்படுத்துவதற்குரிய அல்லது ஓர் உண்மை ஆணைக்குழுவுக்குரிய ‘சன்மானம்’ அல்ல. இரண்டாவதாக, குற்றவியல் நீதிக் குட்பட்டோ அல்லது உண்மை ஆணைக் குழுக்களின் தீர்ப்புகளுக்கோ அல்லது மத்தியஸ்தத் திட்டங்களுக்கோ பாதிக்கப் பட்டவர்களுக்கான நடைமுறைகள் உட்பட்டிருக்காவிடின் நஷ்டஈட்டுத் தேவைகளை அது ஈடுசெய்யாது. அவைகளை நஷ்டஈட்டுத் திட்டத்திலிருந்து விலக்கி வைப்பது ஆத்திர உணர்வுகளை உருவாக்கும். மூன்றாவதாக பாதிக்கப் பட்டவர்களின் போட்டா போட்டிக்குக் கவனம் செலுத்த வேண்டும். பாதிப்புக்களின் சில வகைகள் தம்மை மற்றவர்களை விட நல்ல முறையில் கவனிக்க வைக்கலாம்.

பாதிக்கப்பட்டவர்களைப் பதிவு செய்து, நஷ்டஈட்டுப் பயனாளிகளாக்குவது உண்மை ஆணைக் குழு அல்லது நீதி முறையின் மீது உருவாக்கப்பட வேண்டும். ஆனால் கற்பனாரீதியில் செல்லக் கூடாது. இது அரசியல் சார்பற்றதாகவும் பாகுபாடற்றதாகவும் இருக்க வேண்டும். மேலும் பாதிக்கப்பட்டவர்கள் எல்லோருக்குமான நஷ்டஈட்டுப் பரிமாணம் குறைந்தபட்சத் தேவையைப் பூர்த்தி செய்யவேண்டும்.

நஷ்டஈட்டுத் திட்டமானது மறைமுகப் பாதிப்பாளர்களைக் கவனத்தில் எடுக்க வேண்டும். அவர்கள் தமது நேரடி பாதிப்புக்கு மட்டும் இழப்பீடு பெற்றார்களா அல்லது அதே வேளையில் தமது உளவியல்ரீதியான மற்றும் பொருளாதார ரீதியிலான பாதிப்புக்கும் நஷ்டஈடு பெற்றார்களா என்பது கவனிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவரின் மறைமுகப்

பாதிப்புக்கு ஆவன செய்ய வேண்டியது அரசின் கடமை என்பதை சர்வதேச மனித உரிமைகள் சட்டவிதி உறுதிப்படுத்து கின்றது என்ற வாதத்தை பாதிக்கப்பட்ட வர்களுக்கு உதவும் குழுக்கள் முன் வைக்கின்றன.

எதுவாயினும் பாதிக்கப்பட்டவர்களின் தர வகைகளைப் பொறுத்தவரையில் தகுந்த தகவலை வழங்குவதும், யதார்த்த பூர்வமற்ற எதிர்பார்ப்புகள் உருவாவதைத் தவிர்ப்பதும் மிகவும் முக்கியமானதாகும்.

## *நஷ்டஈட்டு நடவடிக்கைகளின் எல்லை*

தேவைகளின் நிலைமையைப் பொறுத்து பணம், சேவைகள் அல்லது இரண்டும் இணைந்ததாக வழங்கலுக்கான முடிவு அமைகின்றது. பாதிக்கப்பட்டவர்களின் சொந்த முன்னுரிமைகளையும் உள்ள டக்கிய வகையில் அவர்களது அடிப்படைச் சேவைகளைப் பாதித்த நடைமுறை, நிதி விடயங்களைக் கவனத்தில் கொண்டு ஒரு சமநிலையான நஷ்டஈட்டுத் திட்டத்தை வரைவது முக்கியமானது. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தனிப்பட்ட நபரினதும் பாதிப்புகளுக்கு விகிதாசாரப்படி நிதி இழப்பீடு வழங்குவதென்பது யதார்த்த பூர்வமற்றது. ஆனால், எந்தவொரு கொடுப்பனவும் குறைந்தபட்சம் சில வேறு பாடுகளை ஈடுசெய்யப் போதுமானவை யாக இருக்க வேண்டும். இவ்வாறான சன்மானங்கள் ஒவ்வொரு விதமான காயங்களின் பாதிப்புகளுக்கும் குறிக்கப் பட்ட அளவு விதிகளுக்கிணங்க, தனிப்பட்ட முறையைச்சார்ந்தோ அல்லது தீர்மானிக்கப் பட்ட இழப்பீட்டுத் திட்டங்களின் அடிப்படை யிலோ அமைந்திருக்க வேண்டும்.

பரவலான பாதிப்புக்குப் பின்னர் முழுமையான தனிநபர் நஷ்டஈடு போதியதாகவும் சாத்தியமாகவும் இரண்டும் இல்லாத வேளையில் கூட்டு நடவடிக் கைகள் அவசியமானது. கூட்டு நஷ்டஈட்டு நடவடிக்கைகள் தாக்கமானதாக இருப் பதற்கு அவை கீழேயிருக்க வேண்டும். கூட்டுச் செயற்பாடுகள் பெரும் எண்ணிக்கை யான பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னேற்ற கரமாக இருப்பதுடன், கடந்த காலத்தில் கூட்டான முறையில் பாதிப்புக்குள்ளான குறிப்பிட்ட குழுக்களுக்கும் நன்கு பொருத்தப்பாடானதாக இருக்கும்.

குறிக்கோளுடன்கூடிய சில தனிப்பட்ட, கூட்டான பரிமாணங்களின் இணைப்பு எட்டப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக முன்னர் ஒடுக்கப்பட்டு இருந்த சிறுபான்மையினரின் பின்தங்கிய பகுதிகளுக்கு, சிறப்பான, மேலும் இலகுவான வழியில் சுகாதார சேவைகளை வழங்குவதற்கு கூட்டு நஷ்டஈட்டு நடவடிக்கை பயனுள்ளதாகும். இருப்பினும் தனிப்பட்டரீதியில் மனோரீதியான ஆரோக்கியத்திற்கு இது தனிப்பட்ட தேவையை உதாரணமாக தனிப்பட்ட ஆலோசனைச் சேவையை வேண்டுகின்றது. பணரீதியான, பண ரீதியற்ற மற்றும் ஞாபகார்த்த, சீர்திருத்த நஷ்டஈட்டு நடவடிக்கைகள், தனிப்பட்ட மற்றும் கூட்டுத்திட்டம் என்பன சமநிலை யானதாக இருப்பதென்பது முக்கியமானது.

## *நஷ்டஈடு எதிர் வேறு அபிவிருத்தி/ மனிதாபிமான தேவைகள்*

எந்தவொரு பாரதூரமான நஷ்டஈட்டுத் திட்டமும் பயன்மிக்க வரவு-செலவுத் திட்டத்தைக் கொண்டிருப்பது முக்கிய மானது. இது முன்னுரிமை பற்றிய பிரச்சினைகளை எழுப்புகிறது. நஷ்ட ஈட்டுக்கும் ஏனைய தேவைகளுக்குமான சமநிலைக்கான முயற்சி ஒரு சிக்கலான செயற்பாடாகும்.

- நீதிச்சேவை அமைப்பொன்றின் முன்னால் விடுக்கப்படும் ஒரு வெற்றி கரமான நஷ்டஈட்டுக் கோரிக்கையின் விளைவாக அரசு பாதிக்கப்பட்ட வர்களுக்கு இழப்பீடு வழங்கும் கடமையானது, பாதிக்கப்பட்ட வர்களுக்கு உதவி வழங்கும் குழுக்களுக்கு ஒரு தூண்டுகோலா கும். நீதிச்சேவை சன்மானங்கள் முறையே ஏனைய தேவைகளுக்கும் அமுல்படுத்தப்பட வேண்டும்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதில் அரசாங்கத்தின் உணர்வு பூர்வமான ஈடுபாட்டைக் காண்பிப்பதற்கு ஒரு வழி, பாதிக்கப்பட்டவர்களின் கூட்டு

நஷ்டஈட்டுத் தேவைகளின் வெளிச்சத்தில் தனது முழுமையான கொள்கை இலட்சியங்களை பரிசீலனை செய்வதாகும். உதாரணமாக பாதுகாப்பு வரவு-செலவுத் திட்டம் மற்றும் வருமான வரிக் குறைப்பு என்பனவற்றுக்கு மேலாக நீதி, சுகாதாரம், கல்வி, மற்றும் வீடமைப்புத் துறை என்பன வற்றுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் முன்னுரிமை கொடுத்து நிதி ஒதுக்கீடு செய்வதன் மூலமே பலனை அடைய முடியும். இது பொது அரசியல் விவாதத்தின் ஒரு பகுதியுமாகும்.

- அவசர மனிதாபிமான மற்றும் ஏனைய நஷ்டஈட்டுத் தேவைகளுக்கான வேறுபாடானது இரு வழி அணுகு முறையின் தேவையை வேண்டுகிறது. இனப்படுகொலைகள், படுகொலைகள் என்பனவற்றிலிருந்து தப்பியவர்களுக்கு உதவுவதற்கான தேசிய நிதியத்தையும், நீதிச்சேவை சன்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பாதிக்கப் பட்டவர்களுக்கான இழப்பீட்டு நிதியத்தையும் றுவாண்டா ஸ்தாபித்தது. தேசிய நிதியமானது கூடுதலாக மனிதாபிமானத்தன்மைவாய்ந்தது. இனப் படுகொலைகளால் பாதிக்கப்பட்ட, பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்கள், நீதிச்சேவை அங்கீகாரத்திற்கிணங்க, வீடமைப்பு, கல்வி, சுகாதாரம், மற்றும் சமூக ஒருங்கிணைப்பு என்பவற்றில் நஷ்டஈட்டு உதவிகளைப் பெற உரிமையுடையவர்களாவர்.

## *ஒரு நஷ்டஈட்டுத் திட்டத்துக்கான நிதியிடுதல்*

முன்னைய அரசொன்றின் கீழ் இழைக்கப் பட்ட அநீதிகளுக்கான அரச பொறுப்பு புதிய ஆட்சிக்கும் இருக்கும். எப்படியிருந்த போதிலும் பெரும்பாலான விடயங்களில் ஏற்கனவே ஏனைய எண்ணற்ற அரசியல் சவால்கள் அரசின் நிதி வளங்களுக்கு அப்பால் வெகு தூரம் சென்றுள்ளன. அப்படியானால் எவ்வாறு நஷ்டஈட்டுத் திட்டத்துக்கு மேலதிக நிதிகளை ஒதுக்குவது?

- தனிப்பட்டரீதியில் முன்னைய தலைவர்களுக்கும் ஏனைய குற்றவாளிகளுக்கும் சிவில் பொறுப்பு உண்டு. எப்படியிருப்பினும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவை குற்றமிழைத்தவர்களிடமிருந்து ஈடுசெய்து பெற்றுக் கொடுப்பது அரசின் பொறுப்பாகும். வெளிநாடுகளின் அரசாங்கங்கள் தமது நாட்டிலுள்ள குற்றவாளிகளின் சொத்துக்கள் விடயத்தில் உதவ வேண்டும்.
- நிதிரீதியாக நாட்டை விட்டுத் 'துரத்திவிடாதபடி' மிகக்கவனமாக சிந்தித்து ஆரம்பக் கட்டத்தில் மிகக் குறைந்த மென்மையான முறையில் ஒரு வரித்திட்டத்தை வரைந்தால் 'நஷ்டஈட்டு வரி' மூலம் கணிசமான ஒரு தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- ஒரு நஷ்டஈட்டு முயற்சியை உருவாக்கும் போது, பொறுப்பானவர்களில் மறைமுகக் குற்றவாளிகளை உள்ளடக்குவதை அடிப்படை விடயங்களில் ஒன்றாகக் கவனத்தில் எடுக்க வேண்டும். கடந்த காலத்தின் துஷ்பிரயோகத்தனமான கொள்கைகள் காரணமாக சில மறைமுகக் குற்றவாளிகள் பலாபலன்களைப் பெற்றுள்ளனர். முன்னைய ஆட்சியின் கீழ் கூட்டுச் சேர்ந்து கடந்த கால முறைகேடுகளில் ஈடுபட்டதினால் அவை சட்டரீதியான பொறுப்புள்ளவையாகி விடுமா? தொண்டர் நன்கொடைத் திட்டங்களுக்கூடாக நிதிரீதியான ஈடுபாட்டை மறைமுகக் குற்றவாளிகள் கொண்டுள்ளனர் என்ற வாதமும் உண்டு.
- குற்றமிழைத்தவர்களினதும் பயனாளிகளினதும் வாரிசுத்தன்மை முறைகள் எதிர்பார்ப்பது போல தவறானவற்றுக்காக பாதிக்கப்பட்டவர்களின் வாரிசுகளுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டுமா? சட்டப்படி கூறுவதானால் அவ்வாறான கோரிக்கை எதுவும் இல்லை. எவ்வாறாயினும் அவர்களுக்கு ஈடுசெய்தலை வழங்கும் கொள்கையை அரசியல் தார்மீகரீதியாகத் தொடர வேண்டிய கடமை அரசுக்கு உண்டு. இந்தச் சந்தர்ப்பத்தில் நஷ்டஈடு என்பது

சமூக மீள் விநியோகக் கொள் கைகளைக் கொண்ட ஒரு காட்டு வடிவம் அல்லது சம்மதத்துடனான நடவடிக்கைத் திட்டத்தை எடுக்கக் கூடும்.

- உடனடி வரவு-செலவுத் திட்ட கட்டுப் பாடுகள் சிலவற்றைத் தளர்த்துவதின் மூலம் பருவகால தவணை முறை களின் ஊடாக அல்லது ஓய்வூதியத் திட்டங்களின் ஊடாக இழப்பீட்டு கொடுப்பனவுத் திட்டத்தை ஒரு தெரிவாகக் கொள்ளலாம்.
- ஒரு புதிய ஜனநாயக அரசுக்கு சட்ட நடவடிக்கைகளுக்கூடாக ஏனைய அரசுகளிடம் இழப்பீடு கோருவது மிகவும் சர்ச்சைக்குரிய ஒன்றாக இருந்த போதிலும், வெளிநாட்டு அரசு களைப் பொறுத்தவரையில் அரசியல் மற்றும் சட்டரீதியான பொறுப்பு என்பது கேள்விக்கப்பாற்பட்டது. வெளிநாடு களின் பங்களிப்பு என்பது சும்மா நீதி மாத்திரம் என்பதை விட வெளிப்படை யானதாக இருக்க வேண்டும். எந்த ஒரு உண்மை கூறும் நடைமுறையும் முன்னைய ஆட்சியின் கூட்டாளி களிடமிருந்து அல்லது மூன்றாவது நாடுகளிடமிருந்து தகவல் வழங்கக் கோருகின்றது.

### *சேவை வழங்கல்*

நஷ்டஈட்டுச் சன்மானம் மற்றும் அங்கீகாரம் என்பனவற்றுக்கான தீர்மானம் ஒரு சிறந்த நீதிமன்றம் அல்லது உண்மை ஆணைக் குழு என்பவற்றுக்கூடாகவே பெறப்படு கின்றது. எப்படியிருந்த போதிலும் உண்மையான நடைமுறைப்படுத்தல் தனியான ஒரு அமைப்பினால் மேற் கொள்ளப்படுவதே சிறந்தது. சேவை வழங்கல் விதிகளின்படி செயற்பாட்டுத் தேவைகளானவை குற்றவியல் குற்றச் சாட்டுதல் அல்லது உண்மை சொல்லுதல் என்பவற்றைக் கையாளும் நிறுவனங் களின் தேவைகளிலிருந்து முற்று முழுதாக வேறானவை:

- பாதிக்கப்பட்டவர்களை தரப்படுத்திப் பட்டியலிடுவது முதலாவது சேவை வழங்கல் சவாலாகும். இந்த வேலை யானது நீதிமன்றங்கள், உண்மை ஆணைக்குழுக்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் அதே வேளையில் நஷ்டஈட்டுத் திட்டமானது இந்த வகையான பொறிமுறைகளில் பங்குபற்றாதவர் களுக்கும் திறந்து விடப்படவேண்டும். இலகுவான பதிவு பொறிமுறைகள் மற்றும் நாடு தழுவிய தகவல் திரட்டும் இயக்கங்கள் என்பனவற்றின் மூலம் முன்கூட்டியே பாதிக்கப்பட்டவர்களைப் பட்டியலிட வேண்டும்.
- அறிக்கை எடுக்கும் தேவைக்காக சேர்க்கப்படுவதுடன், பாதிக்கப்பட்டவர் களின் நஷ்டஈட்டுத் தேவைகளைப் பதிவு செய்வதில் பயிற்றப்படுவதுடன், நஷ்டஈட்டுத் திட்டத்தின் வரையறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட வேண்டும்.
- சேதங்கள் பற்றிய ஆரம்ப மதிப்பீடு அல்லது கடந்த கால ஒடுக்குமுறை களின் விளைவாக ஏற்பட்ட பாதிப்பின் சேதம் பற்றிய வகைப்படுத்தல் என்பன வற்றுக்கு பாதிக்கப்பட்டவரின் அறிக்கை யின் நீண்ட நேரம் எடுக்கும் ஊர்ஜிதப் படுத்தல் வேண்டியதாகும்.
- கோரிக்கைகள் சம்பந்தமான நிர்வாக முயற்சி போதிய நேரத்துடனும் தனிப்பட்டரீதியிலும் எடுக்கப்படுவது தேவையாகும்.
- பொருத்தமான கொடுப்பனவு விதிமுறை கள், குறிப்பாக வங்கிக் கணக்கு இல்லாதவர்களுக்காக ஏற்படுத்தப்பட வேண்டும்.

## 10 சர்வதேச சமூக வலைக்கான விதிகள்

***சர்வதேச சமூகம் என்ன செய்யக் கூடாது எனக் கோரக்கூடாது. எது சாத்தியம் என்ற யதார்த்தபூர்வமான மதிப்பீட்டை உள்ளடக்கியதாக சர்வதேச உதவி இருக்கவேண்டும்.***

மீளிணக்கம் என்பது வெளியிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதோ அல்லது திணிக்கப்படுவதோ அல்ல. வெளிநாட்டுச் செயற்பாட்டாளர்கள் உள்நாட்டுக் கொள்கைகளுக்கு அனுசரணையாகவும்

ஆதரவாகவும் இருப்பதுடன், மூன்று எளிமையான கோட்பாடுகளையும் பின்பற்ற வேண்டும்.

- ***மோதலுக்குப்பிந்திய மாற்றத்தின் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கான உணர்ச்சி.*** சர்வதேச நன்கொடைச் சமூகங்களினதும் மற்றும் அ.சா.நி (NGO) களினதும் உதவியுடன் நீதி விசாரணைகளும் உண்மை ஆணைக் குழுக்களும் அதிகமாகப் பிரபலமடை கின்றன. அடிக்கடி ஏற்படுகின்ற தன்னியல்பான வெளி அழுத்தம் அல்லது அவர்களுடைய நிறுவனத் திற்கு ஏற்படுகின்ற நிதி அழுத்தமே இந்த விளைவாகும். ஆனால் சர்வதேச சமூகம் இந்த வகையான மண்டியிடும் அணுகுமுறையைத் தவிர்க்கின்றது. வன்முறையிலிருந்து சமாதானத் துக்கான ஒவ்வொரு மாற்றமும் பெரும்பாலும் தவிர்க்கமுடியாதபடி தனித்தன்மை வாய்ந்ததே. மேலதிகமாக அரசியல் ஸ்திரமானது மீளிணக்க விஷயத்தை மிகவும் குறிப்பிடத்தக்களவு கையாள் கின்றது. எனவே அரசியல் தலைமை யிலும், சிவில் சமூகத்திலும் உள்ளும் புறமும் தகுதிகளும், வளங்களும் செயற்படுகின்றன. எனவே, என்ன செய்யக் கூடாது என சர்வதேச சமூகம் நிர்ப்பந்திக்க இயலாது. சர்வதேச ஆதரவானது அரசியல் ரீதியாகவும், நிதிரீதியாகவும், சமூகரீதியாகவும் எது சாத்தியம் என்ற யதார்த்தமான கணிப் பீட்டை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

- ***மீளிணக்க முயற்சியில் உள்ளூர் 'உடைமையை' ஏற்றுக்கொள்ளுதல்.*** உள்ளூரில் உருவாகும் மீளிணக்கப் பாடே நின்று நிலைக்கக்கூடியது. பாதிக்கப்பட்டவர்களும் குற்றமிழைத் தவர்களும் தமக்குள் மீளிணக்கம் காணுவதே ஒரே வழியாகும். இதைத் தொடர்ந்து சர்வதேச சமூகமானது அதிகாரத்தைச் செலுத்துவதற்குப் பதிலாக மக்களுக்கு அதிகாரமளித்து தெரிவு செய்யப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட நிபுணர்களுடன் சர்வதேச திட்டங்கள் என்ற கடலில் மூழ்கி விடாமல் (கொசவாவில் நடந்தது போல) உள்ளூர் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும். ஒரு சமூகம் பலவீனமானதாக இருக்குமாயின் மிகவும் விசாலமானதும் தூரநோக்கு ள்ளதுமான, வெளிநாட்டு - உள்நாட்டு நிறுவனங்களின் கலப்புத் திட்டங் களுடன், அரச சார்பற்ற நிறுவனங்கள் பொறுப்புகளைப் பங்கிடுவது, வேலைச் சுமையைப் பங்கிடுவது, சிறந்த சேவையாற்றுவது போன்ற வெளி உதவிகள் தேவைப்படும்.

- ***ஒரு யதார்த்தபூர்வமான நேரத் திட்டத்தை தேர்ந்தெடுத்தல்.*** சர்வதேச சமாதான ஏற்பாட்டாளர்களும் அனுசரணையாளர்களும் ஒரு விசை பொருந்திய மீளிணக்க அணுகு முறையைப் பிரயோகிக்க வேண்டும். தேசிய ஐக்கியத்தை நோக்கிய வேகமான முன்னேற்றத்தில் தங்கி நிற்கின்ற மாற்றத்தின் வெற்றிக்காக அவர்களது குறுகிய கால நலன்கள் அல்லது பொய் அடிப்படையிலான குற்றம் கூறுதலை இது அடிக்கடி பிரதிபலிக்கின்றது. இது ஓர் எதிர்விளைவாகும். மெதுவான மீளிணக்க செயற்பாடுகள் ஒரு செயற்பாட்டுரீதியான ஜனநாயகத்தை உருவாக்குவதில் தடையாக இருப்ப தாகத் தோன்றினாலும் உண்மையில் அதன் இருப்புக்கு அது அவசியமான தேவையாகும். போதியளவு நேரத் திட்டமானது வெளிநாட்டுச் செயற்பாட்டாளர்கள் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன வற்றின் கடந்த கால சர்வதேசத் திட்டங்கள், தலையீடுகள் என்பன வற்றின் தொடர்ச்சியான மதிப்பிடு தலுடன் கூடிய நீண்ட கால ஈடுபாட்டை உறுதிப்படுத்தும். மீளிணக்கத் திட்டங்களின் செயற்பாட்டின்போது சர்வதேச முகவரகங்கள் விருப்பத் துடனே கட்டாயத்தின் பேரிலோ அரசியல், பொருளாதார சீர்திருத் தங்களுக்கு முன்னுரிமையளிக்க சிபார்சு செய்கின்றனர். ஆனால் பொருத்தமற்ற அரசியல், பொருளாதாரக் கட்டமைப்புகளை உருவாக்குவதன்

மூலம் நீண்டகால மீளிணக்கத்தின் எதிர்பார்ப்புகளை சிதைக்காமல் இருப்பது அவசியமானது.

### *சர்வதேச உதவியின் பயனுள்ள பகுதிகள்*

மறைவாகவுள்ள ஒரு மீளிணக்க முயற்சியில் சர்வதேச சமூகத்தின் நேரடி ஈடுபாட்டிற்கு நீதி என்பது ஒரு உயர்ந்த அதிகார வரம்பாகும். [குறிப்பான நீதிமன்றங்கள், ஐ.சி.சி (ICC) போன்றவை, அத்துடன் நீதியின் சர்வவியாபகக் கோட்பாட்டை அமுல்படுத்துதல்] சர்வதேச முகவரகங்கள், அ.சா.நி (NGO) என்பனவற்றுக்கு உண்மை கூறுதல் என்பது இன்னொரு முக்கியமான துறையாகும். மீளிணக்க முயற்சிக்கான ஆதரவு நோக்குக்கான ஏனைய வடிவங்களாக சந்தர்ப்பங்கள் மற்றும் சாதகமான நிலைமைகள் உருவாக்கப்பட வேண்டும்.

- ***சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.*** தகவல் மற்றும் நிவாரணத்துக்கான திறமை, உண்மையைக் கண்டறிதல், நீதி மற்றும் நஷ்டஈட்டுத் திட்டங்கள் என்பன குறிப்பிடத்தக்களவு வளர்க்கப் பட வேண்டும். சேர்க்கப்பட வேண்டிய வளங்கள் வருமாறு: தகவல் வலைப் பின்னல், மோதலுக்குப் பிந்திய நாடுகளில் மீளிணக்க நடவடிக்கை களில் ஈடுபட்ட உறுதிமிக்க சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், நீதி ஸ்தல நிபுணர்கள், ஆணைக்குழு அறிக்கை வெளியீடுகளின் ஆதரவு, மீள்நிறுவன மயத்துக்கான நிதி ஆதரவு, சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான ஆதரவு போன்றவையாகும். மேலதிக மாக சர்வதேச சமூகமானது, உள்நாட்டு யுத்தம் மற்றும் ஒடுக்குமுறைப் பாதிப்புகளிலிருந்து விடுபடுவதற்கு முன்னுரிமை அளிப்பதைப் பிரதிபலி க்கும் வகையில், ஒரு வன்செயல் மோதலின் பொருள் முக்கியத்துவத்து டனான குற்றம் சாட்டத்தக்க முன்னனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும். மிகவும் கூடுதலான கவனம் மனித உரிமை மீறல்களின் அடிப்படை பற்றியதாக இருக்க வேண்டும்.

- ***சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குதல்.*** ஒரு உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் சர்வதேச சமூகம் அடிக்கடி ஈடுபாடு கொண்டுள்ளது. இதற்கு சமாதான உடன்படிக்கைக்கான மீளிணக்க திட்டங்களுக்காகப் பேசக்கூடிய வாய்ப்பு, பொருத்த மான உள்ளூர் சட்டங்களை வரைதற்கான உதவி, திட்டங்களையும் சட்டங்களை யும் உள்ளூரில் அமுல்படுத்துவதற்குப் பொறுப்பான உண்மைக்குழுவின் அங்கத்தவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குதல் என்பன உண்டு. புதிய விரோதங்களைப் புதுப்பிக்கும் அச்சுறுத்தலை விடுப்பவர்களுக்கான நெருக்குதல்களை வெளியிலுள்ள செயற்பாட்டாளர்கள் கொடுக்க வேண்டும். மீளிணக்கத்தை நோக்கிய நீதி விசாரணைகள் ஒரு தீர்க்கமான கட்டத்தையடையும் போது, தங்கள் நாடுகளுக்கு ஓடிவந்தவர்களை மீளவும் அவர்களது சொந்த நாட்டிடம் ஒப்படைப்பதற்கான அனுசரணையை வெளிநாட்டு அரசுகள் செய்ய வேண்டும். உள்ளூர் அரசியல் மற்றும் சிவில் தலைவர்களின் முயற்சிகளை சட்டபூர்வமாக்கும் வகையில் பல்தேசிய அரச சார்பற்ற நிறுவனங்களும், உத்தியோகபூர்வ முகவரகங்களும் சர்வதேச வழிகாட்டும் விதிகளை உருவாக்குவதில் (உ+ம்: தீமைக் கெதிராகப் போரிடுவதற்கான ஐ.நா வழிகாட்டும் விதிகள்) ஈடுபாடு காட்ட வேண்டும். சர்வதேச அறிக்கை யிடுதல், கண்காணிப்பு பொறிமுறைகள் மிகவும் பிரயோசமான கருவிகளாகும். குற்றவியல் விசாரணைகளின் போது வெளியிலுள்ள முகவரகங்கள் சாட்சியங்களைக் கணணிமயப்படுத்தி பாதுகாத்து வைப்பதில் உதவ வேண்டும். அரசுகள் சாட்சியங்களைத் தொகுக்கும் வேளையில் தமது சுவடிக் காப்பகங்களைத் திறந்து உதவ வேண்டும்.